நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே... பாரதி.

இதழ்-5 மார்கழி '90/தை '91 விலை : 5/=

# பேச்சுவார்த்தையா?

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் திரும்பவும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி விட்டதாகவும் இப் பேச்சு வார்த்தைகள் லண்டனில் இரகசியமாக நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. லண்டனில் நடக்கும் பேச்சுவார்த்தைகள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் குரலெழுப்பியுள்ளன.

ஆயினும் இப் பேச்சுவார்த்தை தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன அவர்களிடம் பத்திரிகையாளர்கள் கேட்ட போது, அப்படி எதுவும் நடக்கவில்லை என்றும், புலிகள் ஆயுதங்களை போட்டுவிட்டு வந்தால் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தாம் தயார் என்றும் தெரிவித்துள்ளார். (சத்தியமே வெற்றியின் அடிப்படை என்று யார் சொன்னது?) நிபந்தனைகள் எதுவுமற்ற பேச்சுவார்த்தை நடத்த தயார் என்கிற அமைச்சர், ஆயுதங்களைப் போட்டுவிட்டு வரும்படி நிபந்தனை விதிப்பதற்கு காரணம் அவரது கடந்த பேச்சுவார்த்தை அனுபவத்தாலாக இருக்கலாம். ஆனால் இந்த நிபந்தனை இலங்கை அரசுக்கு பேச்சுவார்த்தையில் தற்போதிருக்கும் "அக்கறை"க்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

எவ்வகையான சிக்கலான யுத்தமாயினும் சரி ஏதோ ஒரு கட்டத்தில் பேச்சுவார்த்தைக்கு அல்லது பேச்சுவார்த்தைக்கூ டாகப் போயே தீர வேண்டியிருக்கும் என்பது வரலாற்றனுபவம். பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையை தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையோ, விருப்பமோ, அக்கறையோ, அரசுக்கும் சரி புலிகளுக்கும் சரி கடந்த பேச்சுவார்த்தைக் காலத்தில் இருக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். அரசு பேச்சுவார்த் தையை தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் குழப்பத்தையும் தடுமாற்றத்தையும் ஏற்படுத்தி பலவீனப்படுத்தவும் புலிகளை அரசியல் ரீதியாக அந்நியப்படுத்தவுமே நடத்தியது. உலக அளவில் தன்னை நியாயப்படுத்தவும், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை காண்பதில்தான் அக்கறையாக இருப்பதாக காட்டவுமே அரசு இப்பேச்சு வார்த் தையை நடாத்தியது. மறுதரப்பில் புலிகளிடம் தமது இந்தியாவுட னான யுத்தத்தினால் ஏற்பட்ட இராணுவ பலவீனத்தை போக்கி திடப்படுத்தும் நோக்கமே இருந்தது. ஆக இருவரிடமும் இப் "பேச்சுவார்த்தை" எந்த விதத்திலும் ஒரு அக்கறைக்குரிய ஒன்றாக இருக்கவில்லை. இதையிட்டு கொஞ்சமாவது யாராவது அக்க றைப்பட்டார்கள் என்றால் அது அப்பாவித் தமிழ் மக்கள்தான். அவர்கள் கூட பேச்சுவார்த்தையின் முடிவுகளை விடவும், அவ் விடைக்காலம் வழங்கிய யுத்த நிறுத்த நிலமை குறித்தே அதிக ளவில் அக்கறைப்பட்டார்கள் என்று சொல்ல வேண்டும். அரசு தரப்புக்கும் சரி, புலிகளின் தரப்புக்கும் சரி அவரவர் நிலைப்பாடுகளில் அவர்கள் நடந்து கொண்ட விதங்களில் ஒரு "நியாயம்" இருக்கத்தான் செய்கிறது.

சிங்கள பௌத்த பேரினவாதத்தை தனது இருப்புக்கு அடிப் படையாகக் கொண்ட ஒரு அரசு, நாட்டில் நிலவிய ஸ்திரமற்ற நிலையை நிறுத்த மேற்கொண்ட ஒரு நடவடிக்கையே அதுவாகும். இப் பேச்சுவார்த்தை மூலம் உலக அரங்கில் நிலவிய ஆதரவிலிருந்து தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை அந்நியப்படுத்தவும், புலிகளை தனிமைப்படுத்தி அவர்களுடன் யுத்தத்தை நடத்துவதன் மூலம் தாம் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குபவர்களோ, தமிழ் மக்களுக்கு எதிரானவர்களோ அல்ல என்று நிறுவுவதிலும் அரசு வெற்றி பெற்றது. இரண்டாவது தடவையாக யுத்தம் வெடித்த போது, அது வெறும் புலிகளுக்கு "எதிரான யுத்தமே என நிரூபிப்பதிலும், சிங்கள மக்களை "தேசபக்த" போருக்கு அணிதிரட்டவும் அதற்கு முடிந்தது.

புலிகளைப் பொறுத்தவரை, இலங்கை அரசின் பௌத்த சிங்கள இனவாத அரசிருப்பினுள் தமது தமிழீழம் சாத்தியமில்லை என்பது தெரிந்தே இருந்ததால், அரசுக்கு சார்பாக நிற்பதன் மூலம் யுத்த நிறுத்த காலத்தை நீடித்து தம்மைப் பலப்படுத்த முயன்றனர்.

மொத்தத்தில் இவர்களது இரகசிய பேச்சுவார்தையால் ஏமாந்து போனது தமிழ் மக்கள்தான். பேச்சுவார்த்தை இரகசியமாக இருந்தது அரசுக்கு நிறைய வாய்ப்பாக இருந்தது. புலிகளை தனிமைப்படுத்துவதற்கு அரசுக்கு அது கணிசமான அளவு உதவியது. ஆனால் புலிகளுக்கு அரசை பலவீனப்படுத்தும் அவர்களது நோக்குக்கு அது பாதகமாக இருந்தது. ஆயுதங்களின் பலத்தால் மட்டுமே அரசைப் பலவீனப்படுத்தி விட முடியும் என புலிகள் நம்பினர்.


மக்கள் நலனையே எப்போதும் முன்நிறுத்துவோர் சிந்திக்கத் தக்கவை இன்றைய சூழலில் நிறையவே உண்டு.

முதலாவதாக இன்றைய இலங்கை அரசு-முன்னைய அரசுகளை விட மேற்கட்டமைப்பு ரீதியிலாவது குணாம்ச மாற்றம் உடையது. இந்தக் குணாம்ச மாற்றம் கட்டுப்பாடற்ற அரச பயங்கரவாதத்திலிருந்து, மெருகு பெற்றுள்ள பயங்கர ஒடுக்குமுறைக்கு மாறியுள்ளமையாகும். இம் மாற்றத்திற்கு இலங்கையின் முன்னாள் இடதுசாரிப் புரட்சியாளர்கள் பலரும் தமது இன்றைய அரசு அடிவருடித்தனத்தின் மூலம் காலாகியுள்ளனர்.

இரண்டாவதாக, இன்றைய தமிழ் மக்களிற்கு எதிரான யுத்தத்தில் தமிழ்ப்படையினரும் PLOTE, EPDP போன்ற அமைப்புகளூ டாக அரசோடு பங்கு பற்றுவது. இந்த அம்சம் முன்னைய அரசுக் காலத்தில் இருக்கவில்லை. இந்தத் தமிழ்ப் படையினரின் "பங்களிப்பு" தென்னிலங்கையில் தமிழர் விரோத உணர்வைக் குறைக்க கணிசமானளவு உதவியுள்ள போதிலும் ஒட்டு மொத்தத்தில் இலங்கை அரசின் எல்லா நடவடிக்கைகளுக்கும் சர்வதேச அங்கீகாரம் வழங்கவே துணைபோயுள்ளது. இதனால் எவ்வகையிலும் இலங்கை அரசின் அடிப்படைக் குணாம்சங்கள் மாறிவிடவில்லை. இலங்கை அரசின் "பௌத்த சிங்கள பேரினவாத" தன்மை அடிப்படையாக உள்ளவரை, தமிழ் தேசிய இனத்தின் உரிமைகள் பேச்சு வார்த்தையால் முற்றாக வெல்லப்பட முடியாதவையே. சுய நிர்ணய உரிமையை அது ஒரு போதும் அங்கீகரிக்க போவது கிடையாது. ஆனால் தற்போவது நடப்பது போன்ற ஒரு யுத்தமும் கூட இப் பிரச்சினைக்கு ஒரு மருந்தாக இருக்கப் போவ தில்லை.

பேச்சுவார்த்தைகள் இரகசியமாக தலைவர்கள் மட்டத்தில் நடப்பது ஒரு தேசத்தின் தலை விதியை ஒரு சில தனிநபர்கள் தீர்மானித்து

→ 8ம் பக்கம்



அபு ஹுசா.

உள்ளே → பக்-

மலையகத்துக்கு தனிமாகாணம் தேவையா___?

பக்-4-5

குமார் பொன்னம்பலம், ஓடேசன். சந்திரசேகரன்___



நன்றி - நூலகத்திட்டம்



# மெல்வத் தமிழினி.

"நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்பட பிரதி ஞாயிறு தோறும் அவரவர் இஷ்ட தெய்வங்களை வேண்டி ஒன்றுபட்ட பிரார்த்தனையில் ஈடுபடுவோமாக"

இந்த அறிவித்தலுடன் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் வெளிவரும் வீரகேசரி வாரமலர் தனது வாசகர்களுக்கு அழைப்பு விடுவதன் மூலம் சமாதானத்திற்காக உழைத்து வருவது யாவரும் அறிந்ததே. எமது நாட்டில் இன்று உருவாகியுள்ள அமைதியும் சமாதானமுமற்ற துர்ப்பாக்கியமான நிலையை நீக்குவதில் "முக்கிய அம்சங்களை முழுமையும் சுவையும் குன்றாது" வாசகர்களுக்கு அளித்து வரும் வீரகேசரி ஆற்றிவரும் பங்கை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. முதல் முதலாக மலையக மக்கள் மத்தியில் ஒன்றுபட்ட பிரார்த்தனைப் போராட்டத்தினை நடாத்தியதன் மூலம் அவர்களது "உரிமைகளை" பெற்றுத்தந்த, "தன்னால் வெளிவரும் சத்தியம்" அரிச்சந்திரனால் மலையகத் "தனித்துவத் தலைவர்" என அன்பாக அழைக்கப்படும் அமைச்சர் தொண்டமானால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தப் "போராட்ட வடிவத்தை" நன்றியுடன் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது வீரகேசரி. பதினொரு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவத்தை வீரகேசரியின் இந்த "பிரார்த்தனை" அடிக்கடி எனக்கு ஞாபகப்படுத்துவது உண்டு. அப்போது எனது வீட்டிற்கு அருகில் "குரு மகராஜி" பக்தர் ஒருவர் இருந்தார். அவரது வீட்டில் ஒவ்வொரு வாரமும் பல குருமகராஜி பக்தர்கள் ஒன்று கூடுவார்கள். அப்போது ஏதாவது தின்பண்டங்களும் சுவையான பானங்களும் வழங்கப்படுவதால் நானும் அங்கு போவேன். இந்த நிகழ்ச்சியை அவர்கள் "சற்சங்" என்று அழைப்பார்கள். ஒரு நாள் அங்கு கூடும் "பிரேமி"களில் ஒருவர் என்னை அழைத்து பின்வருமாறு உரையாடினார்.

"தம்பி, தென்னை மரத்தில் ஏன் பனங்காய் காய்ப்பதில்லை?"

நான் இந்த விசித்திரமான கேள்வியால் திக்குமுக்காடிப் போனேன். நான் விழிப்பதை கண்டு தனது கேள்வியை இன்னும் தெளிவாக்கும் நோக்குடன் அவர் கேட்டார்.


"தென்னை ஏன் வளர் கிறது?"

இப்போதும் எனக்கு புரியாததால் அவர் விளக்கினார். தென்னை வளர்வது தேங்காய் காய்ப்பதற்கு. அதன் நோக்கமே அதுதான். அப்படி இருக்க அது பனங்காய் காய்த்தால் எப்படி இருக்கும்? தனது நோக்கை விட்டு, செய்ய வேண்டியதை விட்டு பிறிதொன்றை செய்வதாக அல்லவா அது அமையும்? அது தவறல்லவா?

நான் "ஆம்" என்று தலை அசைத்தேன். நிலத்தில் விரிக்கப்பட்டிருந்த அழகிய பூவேலைப்பாடுள்ள கம்பளத்தின் மீது ஒரு தலையணை போட்டு அதன் மீதே என்னையும் உட்கார வைத்திருந்தார்கள். அங்கு அதிகமாக தமது "மெடிற்றேசன்" அனுபவங்களையும், "நெக்ரார்" வந்த சுகானுபவத்தையும் அவர்கள் ஆங்கிலத்திலேயே பேசுவார்கள் என்ற போதும் என்னுடனான உரையாடல் தமிழிலேயே நடந்தது.

"ஆம். அல்லவா? அப்படித்தான் மனிதனும். அவனது வாழ்வின் நோக்கமே இறைவனை அடைவது. அப்படி இருக்க அதைவிட்டு இப்படி பிறவிசயங்களை நோக்கி அவன் தனது வாழ்வை வீணாக்குகிறான்.,; தியானம் தனிமனிதனுக்கும், பிறகு சமூகத்திற்கும், பிறகு முழு உலகிற்குமே சமாதானத்தை தரும். குரு மகராஜியின் "கிரேஸி"னால் 2000 ஆண்டளவில் உலகு முழுவதும் சமாதானம் வந்து விடும் ..... எனவே நாம் தியானத்தில் ஈடுபட வேண்டும்.

எனக்கு இந்த கதைகள் அவ்வளவாக சகிக்கவில்லை. கொஞ்சம் இடதுசாரித்தனம் எனக்கு இருந்ததால் அப்போது அவரிடம் கேட்டேன் "மலையகத்து தொழிலாளர்களது வாழ்விலும் அமைதி ஏற்பட இதனால் வாய்ப்புண்டா? என்று. அவர் "ஆம். நிச்சயமாக" என்றார். என்னால் நம்பமுடியவில்லை. ஆனாலும் அவரது அந்த நம்பிக்கை எனக்கு வியப்பளிக்கத் தவறவில்லை.இப்போது இந்த "பிரார்த்தனை" நாடு முழுவதும் ஒரு பொதுவான முக்கிய அம்சமாகி விட்டது போலத்தான் படுகிறது.



ஆனால் எனக்கு இப்போதும் ஏற்படுகிற சந்தேகம் இதுதான். நாட்டில் "அமைதியும் சமாதானமும்" ஏற்பட பிரார்த்தனை நடாத்துவது உதவும் என்றால் முழு நாடுமே குறைந்தபட்சம் ஒருவாரத்திற்காவது எல்லாவற்றையும் விட்டு விட்டு முழுநேர பிரார்த்தனையில் ஈடுபட்டால் என்ன? இதை ஏன் மலையகத் தனித்துவ தலைவரும், வீரகேசரியும் சேர்ந்து அரசாங்கத்துடன் பேசிச் செய்யக் கூடாது? அதன் மூலம் அமைதியும் சமாதானமும் தோன்றி விட்டால் அதன்பின் என்னதான் தேவை நமக்கு?

ஆனால் இதுபற்றி இன்னுமொரு சந்தேகத்தை எனது சக எழுத்தாள நண்பர் கிளப்புகிறார். "அமைதியும் சமாதானமும் ஏற்பட்டுவிட்டால் பிறகு தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை தேவைப்படாது. முஸ்லிம்களுக்கு தனிமாகாணம் தேவைப்படாது. புலிகளுக்கு ஆயுதம் தேவைப்படாது. அரசாங்கத்துக்கு பாராளுமன்றம் தேவைப்படாது. மக்களுக்கு தலைவர்கள் தேவைப்பட மாட்டார்கள். தலைவர்களுக்கு "பஜரோ" தேவைப்படாது. பிறகு தனித்துவமும் இல்லையாய் விடும்... ஏன் வீரகேசரி கூட பிறகு "முக்கிய" அம்சங்கள் இல்லாததால் தேவையற்றதாகிவிடும். அதனால்தான் அவர்கள் இந்தப் போராட்ட வழிமுறையை கையாள்வதில் அவ்வளவு அக்கறையாக இல்லை" எப்படியோ நண்பரின் இந்தக் கருத்துடன் எனக்கு அவ்வளவு உடன்பாடு இல்லை என்பதைச் சொல்லியே ஆகவேண்டும். அமைதிக்கும், சமாதானத்திற்கும் தேவையானது, தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பது, மக்களின் சனநாயக அரசியல் உரிமைகளை அமுல் செய்வது, பத்திரிகைச் சுதந்திரத்தை கடைப்பிடிப்பது, உலக வங்கியின் கைப்பொம்மையாக இயங்க மறுத்து அரசாங்கம் மக்களின் நலன்களின் அடிப்படையில் செயல்படுவது என்ற மாதிரி எல்லோரும் பாமரத்தனமாக நினைத்துக் கொண்டிருப்பதைப் போலவே நினைத்துக் கொண்டிருப்பவர் இந்த நண்பர். வீரகேசரி அப்படி என்ன சாதாரண பத்திரிகையா? பனங்காய் காய்க்கிற தென்னை மரமா?

■■

கொழும்பிற்கு " ஜனநாயகம் வந்திட்டுது" என்றார் எனது நண்பர் ஒருவர். முதலில் எனக்குப் புரியவில்லை. "கொழும்பில் ஜனநாயகம் நிலவுகிறது" என்று சொல்கிறார் என நினைத்துக் கொண்டு "எனக்குப் புரியவில்லை" என்றேன்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் பொது முகாமையாளர் "ஜனநாயகம்" கொழுமபிற்கு வந்திருக்கிறார். அவரை காலி வீதியில் கண்டேன் என விளக்கினார் அவர்.

"அப்ப ஜனநாயகத்திற்கு யாழ்ப்பாணத்தில் இடமில்லை என்று சொல்லாமல் சொல்கிறாயா? "சரிநிகர்" சொல்லாத சேதிகளை நினைத்துக் கொண்டு அவரிடம் கேட்டேன்.

"என்னவோ கொழும்பில் மட்டும் ஜனநாயகத்திற்கு இடமிருப்பது போலல்லவா உனது பேச்சு இருக்கிறது" என்றுமடக்கினார் அவர்.


"ஜனநாயகம்" என்றதும் எமக்கு இன்னொருவரின் ஞாபகம் வந்தது. இவர் ஒரு சமூகவியலாளர். "சைவத்தின் சிந்தனையாதிக்கமும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் போக்கும்" என்ற தலைப்பில் தீவிரமாக ஆய்வில் ஈடுபட்டிருப்பவர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் தமிழ் மக்கள் ஆயுதங்களை வழிபட வேண்டிய காலம் இதுவென்றும், அவர்களை அதுவே பாதுகாக்கின்றது என்றும் கருத்துப்பட தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான யோகி ஒரு தடவை பேசியிருந்தது குறித்து உரையாடுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்னமும் ஆதிக்கத்தில் இருப்பது சைவத்தின் சிந்தனை ஆதிக்கம்தான். அதற்கும் ஜனநாயகத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை என்று கூறித் தொடர்ந்தார். அவரது கருத்துக்களைச் சுருக்கமாகத் தருகிறேன்.

யாழ்ப்பாணத்தின் சைவ மதப் பாரம்பரியம் ஆயுதவழிபாட்டிற்கு ஏற்கனவே பழகிப் போன ஒன்றுதான். சூலமும், வேலும், வாளும், பிரம்பும் ஏற்கனவே அவர்களது வழிபாட்டு' ஆயுதங்களாக உள்ளன. முக்கியமானபல கோவில்களில் மூலஸ்தானத்தில் இருப்பது ஆயுதம் மட்டும்தான். எனவே இப்போது துப்பாக்கிகளை வழிபடுவது எந்த விதத்திலும் புதியது அல்ல.

யாழ்ப்பாணத்தின் சைவ சித்தாந்த சிந்தனை மரபிற்கும் ஜனநாயகத்திற்கும் சம்பந்தமிருப்பதாகத் தெரியவில்லை. அது தீவிர சுய விசாரணைக்கான இடத்தை அனுமதிப்பதற்குப் பதில் பெரும்பாலும் முடிவுகளை அழுத்தமாக ஏற்படுத்திக் கொண்டு அதன் மேல் எழுப்பப்பட்ட ஒரு கோட்டையாகவே இருக்கிறது.



சைவ சமய மறுமலர்ச்சிக் காலத்தில் நடைபெற்ற புகழ் பெற்ற மத சம்பந்தமான வாதப் பிரதி வாதங்களின் போது "கழுவேற்றல்", "தலையைக் கொய்தல்" போன்ற தண்டனைகள் மாற்றுக் கருத்துள்ள சமண மதத்தினர் மீது நிறைவேற்றப்பட்டுள்ளன.

"புனலிலேடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார் தலை தத்தெனத் தத்துமே
கனலிலேலிடப் பச்சென்றின் றிருக்குமே"

என்ற வரிகளில் எந்த விஞ்ஞான பூர்வ சாத்தியப்பாடான உண்மைகளும் இல்லை என்பதால் இவை அவ்வாறு இருப்பதாக ஏற்றுக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டவையாகவோ அல்லது செய்யப்பட்டவையாகவோ இருக்க வேண்டும். "புத்தனார் தலை தத்தெனத் தத்துமே" என்பது பௌத்தர்களது தலையை வெட்டி எறிந்ததாக இருக்க முடியுமே அன்றி வேறாக இருக்க முடியாது. இன்னும் கூட பல அற்புதங்கள் நடப்பதற்கு உதாரணம் காட்ட முடியும்.

நடந்ததை நடக்காததாகவும், நடக்காததை நடந்ததாகவும் செய்யும் ஆற்றல் தற்போது சைவ சமய முழுமுதற் கடவுளான சிவனின் திரிசூலத்தை விடவும் துப்பாக்கிகளுக்கு அதிகளவில் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. பல வீர மரணங்களும், தியாகங்களும், ஊர்வலங்களும், ஹர்த்தால் போராட்டங்களும் உதாரணத்திற்கு எடுக்கப்படின் இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

அவரது கருத்துக்களை புரிந்து கொள்ளுமளவிற்கு எனக்குச் சைவ சித்தாந்த அறிவு இருக்கவில்லை. ஆனால் அவர் குறிப்பிட்ட உண்மைகளை என்னால் மறுக்க முடியவில்லை.

அதற்கு மேலும் வலுவூட்டும் விதத்தில் தற்போது முஸ்லிம் மக்களின் வெளியேற்றமும் நடந்து கொண்டிருக்கிறது.

சைவ சித்தாந்தம்தான் "சைவமும் தமிழும்" என்பதை அழுத்தியது என யோசிக்கையில், நண்பர் சொன்னதை உண்மை என எடுத்தால் அடுத்து கிறிஸ்தவத்திற்கும் இந்த "சன நாயகப்" பிரச்சினை வரக்கூடுமோ எனச் சந்தேகிக்க வேண்டி இருக்கிறது. முஸ்லிம்களை "இஸ்லாமியத் தமிழர்" எனக் கருதும் வரை நிலைமை கவலைக்கிடம்தான்.

■■

வடக்கு கிழக்கில் நடந்து கொண்டிருக்கும் யுத்தம் லட்சக் கணக்கான மக்களை அகதிகளாக்கி விட்டுள்ளது. போராட்டம் தொடங்கிய காலத்தின் ஆரம்பங்களில் இங்கு நடக்கும் போராட்டத்தைப் பயன்படுத்தி "அகதிகள்" அந்தஸ்துடன் வெளி நாட்டிற்கு ஓடிப்போனவர்கள் அநேகம். ஆனால் இப்பொழுதெல்லாம் உண்மையிலேயே நிறைய அகதிகள் போக்கிடமற்று தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏஜென்சிகளிடம் லட்சக் கணக்கில் காசு கட்டி கொழும்பு அரசாங்கத்தின் "ஜனநாயகத்திற்கு" பயந்து பயந்து "பணம் பிடுங்கி லொட்ஜ்" களில் தங்கியிருந்து வெளிநாடுகளில் போய் "அகதி" யாகும் வாய்ப்பும் வசதியும் எத்தனை பேருக்குத்தான் கிட்டும்?

இதிலே இன்னொரு சோகமான விசயம் என்னவென்றால் கடந்த 83ன் பின் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்ட எழுச்சியால் உந்தப் பெற்று, போராட்டத்தில் குதித்த பல்லாயிரக் கணக்கான இளைஞர்களின் நிலை. தற்போதைய தமிழீழ விடுதலைப் புலிகளின் பக்கமோ, அரசு சார்பான பிற இயக்கங்கள் பக்கமோ சேர முடியாமல், இரண்டுமே தவறானவை என கூறிக் கொள்கிற நிறைய இளைஞர்கள் கொழும்புக்கு ஓடி வருகிறார்கள். இவர்களுக்கு உண்மையில் யாழ்ப்பாணத்தில் இருப்பது புலிகளின் சந்தேகத்துக்கு ஆளாகி விடக் கூடும் என்பதால் ஏற்படுகிற அச்சம் போலவே கொழும்பில் வந்து தங்கியிருப்பதிலும் அச்சம் இருக்கிறது. திடீர் திடீரென அரசுப்படைகள் "லொட்ஜ்களிலும், தங்குமிடங்களிலும் புகுந்து கைது செய்வதால் என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கிறார்கள்.

"நாங்கள் ஒப்பந்தத்தின் பின்பு மன்னிப்பு வழங்கப்பட்டவர்கள் என்ற போதும் எங்களை கைது செய்யும் பொலிசார் அதை கணக்கெடுப்பதில்லை. புலிகள் எங்களை எந்த இயக்கத்திலும் இல்லை என்றாலும் சந்தேகிக்கிறார்கள். எங்களால் யாழ்ப்பாணத்திலோ கொழும்பிலோ வாழ முடியவில்லை. போக்கிடம் என்று கொஞ்சம் நம்பிக்கை தருவது "ஏஜென்சி"கள் தான். அவர்களோ நம்பிக்கையானவர்களாகவும் இல்லை. 3.4 லட்சத்திற்கு மேல் கேட்கிறார்கள். தவிரவும் எந்த நாடும் விரும்பி எம்மை ஏற்கத் தயாராகவும் இல்லை. சனநாயகத்தை தேடி எங்கே ஓடுவது என்று புரியாவிட்டாலும் நாட்டை விட்டு ஓடுவது தவிர்க்க முடியாததாக உள்ளது. ஆனால் ஓரளவு வசதியான குடும்பங்களில் இருந்து வந்த எம்மவர்களுக்கே அது சாத்தியமாகிறது. மற்றவர்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

"உயிர் வாழ்வதற்காக கொள்கையை விட்டு யாருடனாவது சேர்வதா அல்லது கொள்கைக்காக உயிரை விட்டுவிடுவதா? சொல்லப் போனால் இதை தீர்மானிப்பது கூட சிக்கலாகத் தான் இருக்கிறது?

கொழும்பிலுள்ள அகதி முகாம்களையும் லொட்ஜ்களையும் பார்வையிட்டதில் இப்படியான அபிப்பிராயங்கள் கிடைத்தன.

திரிசங்குக்காவது அந்தரத்தில் ஒரு சொர்க்கம் கிடைத்தது. இவர்களுக்கு?



நன்றி - நூலகத்திட்டம்




இலங்கையில் இனப்பிரச்சினையின் தாக்கத்துக்கு உட்படாத துறை எது ? அப்படி ஒரு துறையைக் கண்டு பிடிக்க முடிந்தால் நான் பெரு மகிழ்ச்சி அடைவேன். ஆனால் அத்தகைய ஒரு மகிழ்ச்சி வெறும் கனவாகவே தோன்றுகிறது. அந்த அளவுக்கு சமூக வாழ்வின் சகல துறைகளிலும் இனப்பிரச்சினை ஆழமாக வேர் கொண்டு விட்டது.


இப்போதைக்கு நமது கல்வித் துறையை மட்டும் எடுத்துக் கொள்வோம். ஒரு நாட்டின் எதிர்கால சந்ததியை உருவாக்குவதிலும் எதிர்கால வரலாற்றை நிர்ணயிப்பதிலும் கல்வி ஒரு முக்கியமான பங்கை வகிக்கின்றது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக நமது நாட்டின் பல் இன சமூக அமைப்புக்குள் மோதலும் முரண்பாடும் நிலவி வந்த சமகால வரலாற்றுப் பின்னணியில் கல்வித் துறையும் சிக்கிச் சீரழிந்து விட்டதையே காண்கிறோம்.

ஒரு பல்லின சமூகத்தின் சுமுகமான ஆரோக்கியமான அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் இனங்களுக்கிடையே ஒருமைப்பாடு ஓர் அடிப்படை நிபந்தனையாகும். ஆனால் நமது விளைவாக உருவான இந்த அமைப்பு தடையாகவே இருந்து வருகின்றது.

உயர்கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரை 1970 களின் இறுதிப்பகுதிவரை பல்இனத் தன்மை ஓரளவு பேணப்பட்டே வந்திருக்கின்றது. கல்வி மொழி அடிப்படையில் வேறுபாடு நிலவிய போதிலும் பெரும்பாலான நமது பல்கலைக் கழகங்களில் மூன்று இனங்களைச் சேர்ந்த மாணவர்களும் கல்வி கற்கும் வாய்ப்பு இருந்தது. குறிப்பாக 1970களின் தொடக்கத்தில் எமது உயர்கல்வி நிறுவனங்களில் பல் இனத்தன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பௌத்த கல்விக்காகவே தொடங்கப்பட்ட வித்தியாலங்கார (களனி)ப் பல்கலைக் கழகத்தில் இந்து, இஸ்லாமிய நாகரிகத் துறைகள் தொடங்கப்பட்டன. கலைப்பீடத்தின் சகல துறைகளிலும் அங்கு கல்வி கற்கும் வாய்ப்பு தமிழ் முஸ்லிம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. வித்தியோதய (சிறி ஜயவர்த்தனபுர) பல்கலைக் கழகத்தில் வணிக முகாமைத்துவத் துறையில் தமிழ் முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்க வாய்ப்புக் கிடைத்தது. கொழும்புப் பல்கலைக் கழகத்தில், கலை, விஞ்ஞானம், மருத்துவம், வெளியேறினார்கள். தென் இலங்கைப் பல்கலைக் கழகங்களில் அவர்களுக்கு இடமாற்றம் கொடுக்கப்பட்டது. இதனால் யாழ்பல்கலைக் கழகம் தமிழ் மொழி மூலப் பல்கலைக் கழகமாக மாறியது.

1975க்குப் பிறகு கொழும்புப் பல்கலைக் கழகத்தில் கலை, விஞ்ஞானத் துறைகளில் தமிழ் மொழி மூலம் கற்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டது. இதனால் கொழும்புப் பல்கலைக் கழகம் தனிச் சிங்களப் பல்கலைக் கழகமாகியது. படிப்படியாக களனி, சிறிஜயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களிலும் 80களின் தொடக்கத்திலேயே தமிழ் முஸ்லிம் மாணவர்களுக்கு கல்வி கற்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டது. 1983 இனக் கலவரத்தோடு கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இருந்து சிங்கள மாணவர்கள் வெளியேறினார்கள். இவ்வாறு 1983ஆம் ஆண்டுடன் நமது பல்கலைக் கழகங்களின் பல்லினத் தன்மை பெரும்பாலும் முடிவுக்கு வந்துவிட்டது. பேராதனை மட்டும் இதற்கு ஒரு விதிவிலக்காக இருந்து வருகின்றது. மருத்துவம், பொறியியல் போன்ற தொழில்சார் துறைகளில் மட்டும் கொழும்பு, மொறட்டுவைப் பல்கலைக் கழகங்களில்






கல்வி நிறுவனங்கள் இன ஒருமைப்பாட்டை உருவாக்கும் வகையில் அன்றி இன வேறுபாட்டை ஆழப்படுத்தும் வகையிலேயே அமைந்திருக்கின்றன. இது ஒரு வரலாற்று விபத்து ஆகும்.

குறிப்பாக ஆரம்ப, இடைநிலைக் கல்வி நிறுவனங்களை எடுத்துக் கொள்வோம். இவை மொழி அடிப்படையில் அன்றி இன அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன. இலங்கையின் மூன்று பிரதான இனங்களுக்கும் மூன்று தனித்தனி பாடசாலைகள் உள்ளன. சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் என இவை வழங்கப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட பாடசாலையில் ஒரு இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் 60 வீதத்துக்கு அதிகம் இருந்தால் அப்பாடசாலை அந்த இனத்துக்குரிய பாடசாலை என்று கருதப்பட வேண்டும் என்பதும், அதன் அதிபரும் ஆசிரியர்களில் பெரும்பாலானோரும் அதே இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும் என்பதும் நிபந்தனை. இதன் அடிப்படையில் நாட்டின் பல பெரிய பாடசாலைகள் மாணவர்களின் இன விகிதாசாரம் பற்றிக் கண்ணும் கருத்துமாக இருக்கின்றன. பாடசாலை நிருவாகம் தொடர்பாக கல்வி அமைச்சிலும் சிங்களப் பிரிவு, தமிழ்ப்பிரிவு, முஸ்லிம் பிரிவு என தனித்தனிப் பிரிவுகள் இயங்கி வருவதும் கவனத்துக்குரியது. ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளும் பெரிதும் இன அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன. இக் கல்வி நிறுவனங்கள் எல்லாம் இனத் தனித்துவ உணர்வுக்கு ஒரு நிலைபேற்றை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மாணவர் மத்தியில் இன ஒருமைப்பாட்டு உணர்வு வளர்வதற்கு இன முரண் பாட்டின் விளைவாக உருவான இந்த அமைப்பு தடையாகவே இருந்து வருகின்றது.

சட்டம் ஆகிய துறைகளில் மூன்று இனங்களைச் சேர்ந்த மாணவர்களும் கற்கக் கூடியதாக இருந்தது. பேராதனையிலும் இந்த நிலைமை இருந்தது. 1974ல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்ட போது அது ஒரு பல்லின நிறுவனமாகவே அமைந்தது. தமிழ் முஸ்லிம் மாணவர்களோடு பெருந்தொகையான சிங்கள மாணவர்களுக்கும் அங்கு அனுமதி வழங்கப்பட்டது. கிழக்குப் பல்கலைக் கழகம் கூட ஒரு பல்லின நிறுவனமாகவே தொடங்கப்பட்டது.

70களில் உயர்கல்வி நிறுவனங்களில் காணப்பட்ட இந்தப் பல்லினத் தன்மை இன ஒருமைப்பாட்டை நிலைநாட்டுவதில் அரசியல் ரீதியில் சாதகமான பாதிப்புகள் எவற்றையும் ஏற்படுத்தாத போதிலும் கலாசாரத் துறையில் ஒரு புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் வளர்ச்சியும் ஏற்பட வழி வகுத்தது என்றே கூற வேண்டும். நமது ஆய்வறிவாளர்கள் மத்தியிலும் கலைஞர்கள் மத்தியிலும் ஒரு மன விசாலமும் புதுமை நாட்டமும் ஏற்பட இச்சூழல் உதவியுள்ளதை மறுக்க முடியாது. உதாரணமாக யாழ்ப் பல்கலைக் கழகத்தில் சிங்கள மொழி மூலக் கல்வி தொடங்கப்படாதிருந்தால் தமிழில் ஒரு பொன்மணியும் சிங்களத்தில் ஒரு சருங்கலேயும் உருவாகி இருக்க முடியாது என்பது நிச்சயம். ஆனால் 70களின் இறுதியில் இன உறவில் ஏற்பட்ட பாரிய விரிசல் இத்தகைய வாய்ப்புக்களை மறுத்துவிட்டது.

1977ல் ஐக்கிய தேசியக் கட்சி இனக்கலவரத்துடன் தனது ஆட்சியைத் தொடங்கிய போது யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து சிங்கள மாணவர்கள் தமிழ் முஸ்லிம் மாணவர்கள் இப்போதும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

1985 வரை இலங்கையின் இனப்பிரச்சினை தமிழ்–சிங்கள இனங்களுக்கிடையிலான பிரச்சினையாகவே இருந்து வந்தது. ஆயினும் 1985 உடன் அது தமிழ்–முஸ்லிம் பிரச்சினையாகவும் வளர்ச்சியடைந்தது. இந்த வளர்ச்சியின் தர்க்கரீதியான விளைவாக இந்த ஆண்டு (1990) தமிழ்–முஸ்லிம் உறவின் வரலாறு இரத்தத்தால் எழுதப்பட்டு விட்டது. தமிழ்ப் புலிகள் கிழக்கில் பல நூற்றுக்கணக்கான முஸ்லிம்களை கொன்று குவித்தனர். யாழ்ப்பாணம் உட்பட வடக்கில் இருந்து முஸ்லிம்கள் அனைவரையும் உடுத்த உடையுடன் வெளியேற்றினர். இதன் விளைவாக யாழ்ப்பல்கலைக் கழகத்திலும், கிழக்குப் பல்கலைக் கழகத்திலும் பயின்ற நூற்றுக்கணக்கான முஸ்லிம் மாணவர்கள் அகதிகள் ஆகினர். அரசாங்கமும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும் இம்மாணவ அகதிகளுக்காக தும்பறையில் ஒரு அகதி முகாமை அமைத்துக் கொடுத்துள்ளன. மாணவர்களுடன் அகதிகளான விரிவுரையாளர்களை இந்த அகதி முகாமைப் பரிபாலிக்குமாறு பணித்துள்ளனர். இப்போது முஸ்லிம் மாணவர்கள் இல்லாமலேயே யாழ் பல்கலைக் கழகமும் கிழக்குப் பல்கலைக் கழகமும் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. ஆக இன்று இலங்கையில் இரு வகையான பல்கலைக் கழகங்கள்தான் இயங்குகின்றன. ஒன்று சிங்களமக்களுக்கான சிங்களப் பல்கலைக் கழகம்; மற்றது தமிழர்களுக்கான தமிழ்ப் பல்கலைக்கழகம். இந்நிலையில் முஸ்லிம்களுக்கு ஒரு தனிப்

→ பக். 7

## சூரியனைத் தின்றவர்கள்

சூரியனைப் பிய்த்து
தம் சீடர்களுக்கு அதை அளித்து
அவர் கூறியதாவது :
அனைவரும்
இதனை வாங்கித் தின்னுங்கள்
இது
உங்களுக்காக கையளிக்கப்படும்
என் அதிகாரங்கள்
இதனை உட் கொள்ளும் நிமித்தம்,
ஒளியின் மீதான ஆட்சியையும்
இருளின் மீதான ஆதிக்கத்தையும
நீங்கள் அடைகிறீர்கள்

எனது ராஜ்ய பரிபாலனத்தின்
திறவு கோல்களை
உங்கள்
இடுப்பிலும் தோளிலுமாகச்
சுமத்துகிறேன்.

அவர்கள் எலும்புக் கூடுகளின் மேல்
உங்கள் இருப்பும்,
உங்கள் அனைவரின்
எலும்புக் கூடுகளின் மேல்
எனது இருப்பும்
எனதேயான சித்தம்

ஒன்றை மட்டும்
நானுங்களுக்குச் சொல்கிறேன்,
ஆயுதங்களின் மீதான
நம்பிக்கையையும்,
அராஜகங்களின் மீதான விசுவாசத்தையும்
வலுப்படுத்துங்கள்

ஏனெனில் தண்டிக்கும் அதிகாரம் மட்டுமேயன்றி
மன்னிக்கும் அதிகாரம்
உங்களுக்கு வழங்கப்படவில்லை

எவனொருவனை நீங்கள்
மரணத்திற்கு தீர்வையிடுகிறீர்களோ
அவனது மரணம்
எனது நித்திய அரசின் ஓர்
செங்கல்லுக்குச் சமானமாகும்

நீங்கள் ஒவ்வொருவரும்
சுடு குழலின் மீது
பிரமாணிக்கமாயிருங்கள்

உங்கள்
தூக்கத்தின் துணையாக
துப்பாக்கிகளே
என்றென்றும் இருக்கக் கடவதாக!
துப்பாக்கியை இழக்கும்
எவனொருவனும்
எனது
மந்தைகளை மேய்க்கத்
திராணியற்றவனாவான்

இயற்கை மரணம்
உங்களை அணுகாதபடிக்கு
செய்ய வேண்டியது
எனது
பேரரசின் கடமை என்பதை மறவாதீர்

பூமி எங்கும்
வானத்து மீன்களைப் போலவும்,
கடற்கரை மணலைப் போலவும்
மானுடத்தின் பிணங்களை
பல்கிப் பெருகச் செய்யுங்கள்

எனது அரசின் வரலாறு
மனிதக் குருதியால்
எழுதப்படும் என்ற
தீர்க்கதரிசிகளின் வாக்கு
நிறைவேறக் கடவதாக !

— தமயந்தி.

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகமக்க
# தனிமா
# தேவை

மலையக மக்களின் பிரச்சினைக்கான தீர்வுகளில் தற்போது தனி மலை மாகாணக் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. ஈரோஸ் பாலகுமார் முதல் வி.பி. கணேசன் வரை பலர் இதை வலியுறுத்திப் பேசி உள்ளனர். அமைச்சர் செல்லச்சாமி கூட ஒரு தடவை "இக் கோரிக்கையை நோக்கி நாம் தள்ளப்படலாம்" என அறிவித்திருந்தார்.

பிரபல்யமடைந்து வரும் இக் கோரிக்கை பற்றிய தங்களது நிலைப்பாடு என்ன? முஸ்லிம் காங்கிரஸின் தனி மாகாணக் கோரிக்கையுடன் இதை ஒப்பிடலாமா? இது வடக்கு கிழக்கு மக்களின் போராட்டத்துடன் சம்பந்தப் பட்டதாகக் கருதலாமா? எந்தளவிற்கு மலையக மக்களின் தனித்துவமான பிரச்சினைகளுக்கு இது ஒரு மாற்றாக அமைய முடியும் என்ற கருத்து மலையக மக்கள் மத்தியில் வேரூன்றி உள்ளது.?

## குமார் பொன்னம்பலம் :

எத்தனையோ வருடங்களுக்கு முன்பதாகவே மலையக மக்கள் தனித்தேசிய இனமா என்ற கேள்வி எழுப்பப்பட்டு பி.ஏ.காதர் என்பவர் இதுபற்றி ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.

ஒரு குறித்த் மக்கள் குழுவினரை தேசிய இனம் என்று சொல்வதற்கு குறித்த மொழி, பொதுவான பிரதேசம், விசேஷ பொருளாதார அமைப்பு, கலாசாரம், பண்பாடு என ஐந்து முக்கிய அம்சங்களை அம் மக்கள் குழு கொண்டதாக இருத்தல் வேண்டும். இவையனைத்தும் இருந்தால் அவர்களை ஒரு தேசிய இனமாகக் கருதலாம். அவ்வாறான ஒரு தேசிய இனத்திற்கு சுயநிர்ணய உரிமை உண்டு.

எனினும் மலையக மக்களின் தனிமாகாணக் கோரிக்கை பற்றி நான் அதிகமாகச் சிந்திக்கவில்லை. ஏனெனில் முதலாவது எங்களுக்கென்றொரு பெரிய பிரச்சினை இருக்கிறது. அதாவது வடக்கு-கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களின் பிரச்சினை. இரண்டாவது இந்த மலைமாகாணக் கோரிக்கை பற்றி எந்தக் கட்சியோ, அரசியல் குழுவோ திட்டவட்டமான வரையறுத்த கோரிக்கை எதனையும் வைக்கவில்லை. இக் கோரிக்கையை நோக்கி நாம் தள்ளப்படலாம். இவ்வாறு கருதப்படலாம், எண்ணப்படலாம் என்பதில் எதுவித அர்த்தமுமிருக்க முடியாது.

முஸ்லிம் காங்கிரஸின் தனி மாகாணக் கோரிக்கையுடன் இதனை ஒப்பிடமுடியாது. நான் முன்னரே கூறியது போல மலையக மக்களின் பிரச்சினை இன்னமும் யாராலும் சரியாக முன்வைக்கப் ப்டவில்லை. இந்நிலையில் எவ்வாறு ஒப்பிட முடியும்?

இதனை வடக்கு கிழக்கு மக்களின் போராட்டத்துடன் சம்பந்தப்பட்டதாகக் கருத முடியாது. மலையக மக்கள் வட கிழக்கு மக்களிலிருந்து வேறுபட்டவர்கள். அவர்களின் பிரச்சினைகள் வேறுபட்டவை என அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் கூறி வருகிறார்கள். வட கிழக்கு மக்களின் பிரச்சினைகளுடன் தொடர்பு வைக்கக் கூடாதென்று 76 இல் தொண்டமான் கை கழுவி விட்டார். அந்தத் தலைமை வட கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு மத்தியஸ்தம் வகிக்க வருவதாகக் கூறியும் வட-கிழக்கு மக்கள் அதனை ஏற்கவில்லை.

இக் கோரிக்கை தொடர்பாக அவர்களிடமே திட்டவட்டமான கருத்து இல்லை. அவர்களுக்கே தமது பிரச்சினைகளுக்கு இக் கோரிக்கை மாற்றாக அமைய முடியும் என்ற நம்பிக்கை எவ்வளவு தூரம் இருக்கிறது என்று தெரியவில்லை.

## நடேசன் :

...ளின் முக்கியமாக ... ண்டு :

முதலாவது இலங்கையின் சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் மிகச் சிறுபான்மையினர் என்பது. இரண்டாவது அவர்களுக்குள்ளும் பெரும்பான்மையோர் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பது. எனவே இவர்களது பிரச்சினைகள் பொருளாதாரம், உயிர் வாழ்தல் போன்ற அடிப் படைப் பிரச்சினைகள்தாம்.

இது தவிர மலையக மக்கள் வாழும் எந்த மாகாணத்திலும் அவர்கள் பெரும்பான்மையினராக இல்லை. ஏன் மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும் கூட நுவரெலியாவில் 43% மாகவும், பதுளையில் 20% மாகவும், இரத்தினபுரியில் 11% மாகவுமே உள்ளனர். 77 இனக் கலவரத்தின் பின்னர் மலையகத்திலிருந்து வெளியேறி வவுனியாவில் 20% மானோரும் முல்லைத்தீவில் 14% வீதமானோரும் வாழ்கிறார்கள்.

எனவே எந்த மாகாணத்திலோ அல்லது மாவட்டத்திலோ மலை மக்கள் பெரும்பான்மையாக இல்லை. இந்நிலையில் தனி மாகாணக் கோரிக்கை என்பது ஒரு யதார்த்தமான கோரிக்கையாகப் படவில்லை. மாறாக நிர்வாகப் பரவலாக்கத்தின் கீழ் எல்லைகள் மாற்றப்பட்டு அவர்கள் வாழும் பகுதிகளை பெரும்பான்மையாக உள்ளடக்கி தேர்தற் தொகுதிகளையோ மாவட்டங்களையோ முதலில் உருவாக்கி அவர்களே தமது பிரதிநிதிகளைத் தெரிய வாய்ப்பளிக்க வேண்டும்.

இதன் பின்னர் தான் தேர்தற் தொகுதிகளுக்கூடாக மாகாண சபையையோ பிரதேச சபையையோ கேட்கலாம்.


ஒப்பிடுதல் என்பதைத் தவிர்த்து முஸ்லிம் மக்களுக்கு தனிமாகாணம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டால் மலையக மக்களுக்கும் அது கொடுக்கப்படுவது அவசியமானது.

சம்பந்தப்பட்டதாகக் கொள்ளலாம். தமிழ், மக்களின் போராட்டத்தின் விளைவாக இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டு மாகாணசபை அமைக்கப்பட்ட பின்னரேயே தனி மாகாணசபை பற்றிய சிந்தனை எழுந்தது. அதற்கு முதல் மாகாண சபை பற்றி யாரும் பேசவில்லை. அவ்வாறாக இல்லை என்றே கூறலாம். சில தலைவர்களிடமும் கட்சிகளிடமும் மட்டுமே இக்கருத்து நிலவுகிறது. எனினும் இதனால் இன்றைய மலையக மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப் படமாட்டாது.

## சந்திரசேகரன்.

மாகாணசபைகள் இலங்கையில் ஏற்படுத்தப்பட்டதற்கே, வட கிழக்கு சிறுபான்மை மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதே காரணமாகும். சிறுபான்மை மக்களின் கோரிக்கைகளும், குறைபாடுகளும் மாகாணசபையின் மூலம் தீர்க்கப்படலாம் என்ற கருத்தை அரசும், அரசியலமைப்புக்களும் ஏற்றுக்கொண்டதின் வெளிப்பாடே இன்றைய மாகாணசபைகள். இவ்வகையில் மலையக மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவும் அவர்களின் கோரிக்கைகள் நிவர்த்தி செய்யப்படவும் தனிமாகாண அமைப்புத் துணை புரியலாம். திரு. செல்வநாயகம், திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஆகியோர் காலத்தில் சமஷ்டி, மாகாண அமைப்பு போன்றன சட்டவிரோதமாகவும், நடைமுறைக்குச் சாத்தியமற்றதாகவும் கேலிக்குரியதாகவும் கருதப்பட்டது. ஆனால் இன்று மாகாணசபைகளின் முக்கியத்துவம் அரசு தரப்பிலேயே அதிகம் வலியுறுத்தப்படுகிறது. எனவே பலருக்கு வியப்பையும் கேள்விக்குறியையும் ஏற்படுத்தியுள்ள "மலை மாகாணம்" தவிர்க்க இயலாத ஒன்றென்பதை வரலாறு காட்டப்போகிறது.

கிழக்குப் பகுதியில் வாழும் முஸ்லிம் மக்கள் வடகிழக்கில் வாழும் தமிழர்களைப் போலவே ஆரம்பத்திலிருந்தே இனவாத அரசுகளினால் புறக்கணிக்கப் பட்டே வந்துள்ளனர். வட கிழக்கு மாகாண அமைப்பு ஏற்பட்டமை இம் முஸ்லிம் மக்களுக்கும் பாதுகாப்பையும் உரிமையையும் உறுதிப்படுத்துவதாயிருக்கும். ஆனால் சிறுபான்மை தமிழர்களிலிருந்தும் தனியாகப் பிரிந்து ஒரு மாகாணம் கோருவதன் அவசியம் என்ன என்பது விவாதத்திற்குரிய விடயமாகும். ஆனால் மலைமாகாணம் என் பது இத்தகைய கோரிக்கையல்ல. தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள மாகாண அமைப்பு மலையக மக்களுக்கு எதுவித தீர்வையும் அல்லது மனநிறைவையும் ஏற்படுத்தவில்லை என்பதாலேயே தனி மாகாணம் வலியுறுத்தப்படுகிறது.



வடக்கு-கிழக்கு மக்களின் தனிநாட்டுக் கோரிக்கையும், முஸ்லிம் காங்கிரஸின் தனி மாகாணக் கோரிக்கையும், மலையக மக்கள் மத்தியில் எழுந்து வரும் தனிமாகாணக் கோரிக்கையும் மொத்த நாட்டினது எதிர்காலத்தில் ஏற்படுத்தப் போகும் விளைவுகள் பற்றி ஏதாவது சொல்ல முடியுமா?

## குமார் :

பாரிய விளைவு்களை ஏற்படுத்தலாம். எனினும் அவ் விளைவுகள் எத்தகையவை என எதுவும் எதிர்வு கூற இயலாது.

ஏனெனில் தனி நாட்டுக் கோரிக்கை 76 இல் ஆரம்பமானது. தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் வடக்கையும், கிழக்கையும் கருதியே அவர்கள் செயற்பட்டார்கள். எனினும் 84 வட்டமேசை மாநாடு, திம்பு பேச்சு, அரசியல் கட்சிகள் மாநாடு என்பவற்றில் தனி நாடு தவிர்ந்த ஒரு அமைப்பை அலசி ஆராயத் தயார் என்பதன் அடிப்படையில் அதில் கலந்து கொண்டார்கள்.

84-89 காலப்பகுதியில் முஸ்லிம்மக்கள் தமது தனித்துவத்தை நிலைநாட்ட முன்வந்தார்கள் பல காரணங்களுக்காக. அதில் ஒரு காரணம், தமக்கும் தனி நாட்டுக்கும் வெகுதூரம். என்று கூறி ஒரு தனியான ஆட்சி அமைப்பின் கீழ்தான் தமது தனித்துவத்தை நிலை நாட்ட முடியுமென்று கருதினார்கள். ஆனால் அண்மைக் காலங்களில் அவர்கள் தமிழ் மக்களுடன் இனிமேல் வாழ முடியாது. தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களின் கீழ் இருக்கும் ஒரு அரசியலமைப்பில் தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படமாட்டாது. ஆகவே தமக்கான ஒரு அமைப்பு தமிழ் மக்களின் அமைப்புக்கு சரி சமமாக இருக்க வேண்டும் என்ற இந்த நிலைக்கு வந்து தமிழ் மக்களுக்கு கொடுக்கப்படும் அதிகாரம் அத்தனையும் முஸ்லிம் மக்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று கோருகிறார்கள். எனவே தான் இவ்வாறான போக்குகள் என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தும் என திட்டவட்டமாக வரையறுத்துக் கூற இயலாது.

## நடேசன் :

பெருமபானமையினர் அரசான U.N.P. அரசு சமஷ்டி முறையில் பிரச்சினையைத் தீர்க்க முயன்றால் மட்டுமே நாட்டில் அமைதி நிலவும். இல்லாவிடில் இனவாதம் வளர்ந்து நாட்டில் மிகப் பாதகமான விளைவுகளேயே ஏற்படுத்தும்.

## சந்திரசேகரன் :


கிழக்குப் பகுதியில் வாழும் முஸ்லிம் மக்கள் வடகிழக்கில் வாழும் தமிழர்களைப் போலவே ஆரம்பத்திலிருந்தே இனவாத

அரசுகளினால் புறக்கணிக்கப பட்டே வந்துள்ளனர். வட கிழக்கு மாகாண அமைப்பு ஏற்பட்டமை இம் முஸ்லிம் மக்களுக் பாதுகாப்பையும் உரிமையையும் உறுதிப்படுத்துவதாயிருக்கும். ஆனால் சிறுபான்மை தமிழர்களிலிருந்தும் தனியாகப் பிரிந்து ஒரு மாகானம் கோருவதன் அவசியம் என்ன என்பது



நன்றி - நூலகத்திட்டம்







தனிமாகாணக் கோரிக்கைக்கும், மலையக மக்களின் பிரசா உரிமைக்கும் சம்பந்தம் இருப்பதாகக் கொள்ள முடியுமா?

குமார் :

இல்லை. தொடர்பிருப்பதாகச் கூற முடியாது. ஏனெனில் சட்டரீதியாகப் பிரசா உரிமை விடயம் தீர்க்கப்பட்டு விட்டது.

நடேசன் :

கொள்ள முடியும். ஏனெனில் பிரஜா உரிமை பெறாமல் தனிமாகாணம் கேட்க இயலாது. இவ்வகையில் பிரஜா உரிமை ஒரு தூண்டுகோலாக இருந்திருக்கும்.

சந்திரசேகரன் .

பிரஜா உரிமை என்பது நாடற்ற நிலையில் வாழ்ந்து வரும் மக்களுக்கு இந்நாட்டிலுள்ள உரிமைளை உறுதிப்படுத்துவதாகும். இந்நாட்டின் ஏனைய மக்களுக்கு சரிநிகராக வாழுகின்ற தகுதி தங்களுக்கு இருப்பதை பிரஜா உரிமை பெற்ற உவ்வொருவரும் உணர்ந்து கொள்கின்றனர். இந்நாட்டில் தாங்கள் உரிமையற்ற நிலையில் புறக்கணிக்கப்படுவதை மாற்றியமைக்க வேண்டுமென்ற சிந்தனைத் தெளிவும் விழிப்புணர்ச்சியும் மலையக சமூகத்தில் ஏற்பட்டு வருகிறது. இதன் வெளிப்பாடே தனிமாகாணம் வேண்டுமென்ற கோஷமாகும். பிரஜா உரிமை பெறுவதால் மட்டும் மலையக மக்கள் மனநிறைவடைய முடியாது. காரணம் வடகிழக்கிலே தொடர்ச்சியான போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள அத்தனை பேரும் பிரஜா உரிமை

உள்ளவர்கள்தான். எனவே பிரஜா உரிமைக்கு அப்பாலும் பல உரிமைகளுக்காக செயற்பட வேண்டியுள்ளது. எனவே பிரஜா உரிமைக்கு ஒரு சமூகத்தில் அந்தஸ்தை ஏற்படுத்தலாம்.

ஆனால் தனிமாகாணக் கோரிக்கையில்தான் மலையக மக்களின் பாதுகாப்பும் எதிர்கால விமோசனமும் தங்கியுள்ளது.


தனிமாகாணம் அமைக்கப்பட்டால் அது எவ்வாறு விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்துமென நாம் கருதவில்லை. அப்படியெவராவது கூறினால் அதுதான் இனவாதமாகவும், இனவாதக் கண்ணோட்டமாகவும், இருக்கும். தனிநாடு வேண்டுமென்ற கோஷம் கூர்மையடைந்தபோது, மாகாண சபையை முன்மொழிந்ததே அரசுதான். கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் மோதல்கள் தலையெடுத்த போது முஸ்லிம் மாகாணத்தை ஆமோதித்ததும் அரசுதான். ஆகவே மலையக மக்களின் தனிமாகாணக் கோரிக்கையை இதே கண்ணோட்டத்தோடு அரசு நோக்க வேண்டுமென நாம் விரும்புகிறோம்.
வட கிழக்கு தமிழ் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கை விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும் இலக்கை இன்னும் அடையவில்லை. அதைத் தவிர்த்துக் கொள்கின்ற சந்தர்ப்பமும் அவகாசமும் அரசுக்கு இன்னமும் இருக்கிறது.

தனிமாகாணக் கோரிக்கையை கண்டு அச்சம் கொள்கின்றவர்களாகவே மலையகத்தைச் சேர்ந்த மத்தியதர வகுப்பினர் இருக்கிறார்கள். தனிமாகாணக் கோரிக்கைக்கு எதிராக இச் சமூகத்திலேயே ஒரு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டால் அதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ துணைபுரிகிறவர்களாக இவர்கள் செயற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. காரணம் தங்களின் தொழிலையும், சொத்தையும், சுகபோக வாழ்க்கையையும் பாதுகாத்துக் கொள்வதிலும் அபிவிருத்தி செய்து கொள்வதிலுமேயே இவர்களின் கவனம் முழுமையாக இருக்கும். அரசியலில் ஆதிக்கம் செலுத்த விரும்பும் அளவிற்கு மலையக மத்தியதர வர்க்கத்தினர் வளர்ந்திருப்பதாக நாம் கருதவில்லை. எனவே மாகாணக் கோரிக்கை தொழிலாளர் வர்க்கத்தின் அபிலாஷையாகவே எதிர்காலத்தில் பரிணமிக்கும்.

மலையகத்திற்கு தனிமாகாணம் என்பது இனவாத நோக்கில் எழுந்ததோ அல்லது பிரதேசவாதம் என்ற வரட்டுத்தனத்தினால் முன்வைக்கப்படுவதோ அல்ல. இது ஒரு சமூகத்தின் எதிர்கால அரசியல் தீர்வுகளுக்காக முன் வைக்கப்படுகின்ற கோரிக்கையாகும். இதன் மூலம் மலையக மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் ஏற்படுவதோடு அவர்களின் நம்பிக்கையான எதிர்காலமும் உறுதிப்படுத்தப்படும். இதன் மூலம் இனத்துவக் குரோதங்கள் மறைந்து பரஸ்பரம் புரிந்துணர்வு மேலோங்கும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். எங்களின் இந்தக் கபடத்தனமற்ற தூய்மையான உணர்வுகளையும் எதிர்பார்ப்புகளையும் புரிந்து கொண்டு சகல மக்களும் எமது கோரிக்கைகளுக்காக குரல் கொடுக்க வேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகும்
அத்தோடு வட கிழக்கில் வாழும் சிறுபான்மை மக்களாகிய தமிழ், முஸ்லிம் மக்கள்-மலையக மக்களும் சிறுபான்மை மக்கள் என்ற ரீதியில் ஆத்மார்த்தமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென விரும்புகிறோம்
அதே போல் அவர்களின் அரசியல் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தரக்கூடிய அளவிற்கு மலையக மக்கள் பலம் பெறுவார்களெனவும் எதிர்பார்க்கின்றோம்.

குமார் பொன்னம்பலம்
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
நடேசன்
தொழிற் சங்கங்களின் கூட்டு முன்னணி,
சந்திரசேகரன்
மலையக மக்கள் முன்னணி
ஆகியோர்
தெரிவிக்கும்
கருத்துக்கள் —

...ா தத்திற்குரிய விடயமாகும் ...ால் மலைமாகாணம் என் பது ...தனை... கோரிக்கையல்ல ...போது ஏற்படுத்தப்பட்டுள்ள ...ாண அமைப்பு மலையக ...ளுக்கு எதுவித தீர்வையும் ...லது' மனநிறைவையும் 'ஏற்படு ...வில்லை என்பதாலேயே தனி ...ாணம் வலியுறுத்தப்படுகிறது.



வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் இது தொடர்பாகவும், அவாகளது நிலைமை தொடர்பாகவும் நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

குமார் :

தனிநாடு தவிர்ந்த ஒரு அமைப்பு என்றால் முதற்கண் வட கிழக்கு இணைந்து இருக்க வேண்டும். அதனைப் பிரதிபலிக்கக் கூடியதான ஒரு அரசியலமைப்பு இருக்க வேண்டும். அதன் பெயர் இன்னமும் தீர்மானிக்கவில்லை. அவ்வமைப்புக்களின் பிரதிநிதிகள் வட- கிழக்கில் வாழும் மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும். அவ்வமைப்பு வட-கிழக்கு மக்களுக்குத் தேவையான அரசியல் உரிமைகளை அரசியல் யாப்பு மூலமாக கொடுக்க் வேண்டும் என்பது தமிழ் அரசியல் கட்சிகளின் கோரிக்கை.

முஸ்லிம்கள் தமது அரசியலதிகாரம் நலன்களை உறுதிப்படுத்தும் விதத்தில் தமிழ் மக்களுடன் ஒரு சம்பந்தமும் வேண்டாம் என்றும், தமிழ் மக்களுடன் சேர்ந்து வாழ முடியாது என்ற ரீதியில் தனியான ஒரு முஸ்லிம்களுக்கான அமைப்பு இருக்க வேண்டும் என்றும், அவ்வமைப்பிற்கு அரசியல் யாப்பு ரீதியான அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்றும், தமிழர்களுக்கு வழங்கப்படும் அதிகார அமைப்புடன் சரிசமமாக இருக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இவ்விடயத்தில் இணக்கம் காண வேண்டுமென்று தமிழ்-முஸ்லிம் கட்சிகள் கூடிப் பேசி, ஒரு கட்டத்தில் உறவுகள் அறவே துண்டிக்கப்பட்டு இப்போது ஒரு சில நாட்களாக முஸ்லிம், தமிழ்க் கட்சிகள் மீண்டும் கதைக்கும் நிலைக்கு வந்துள்ளோம். இது எப்போது முடியும், எந்த மாதிரி முடியும், சுமுகமாகவா விரும்பத்தகாததாகவா என்பதை இருந்துதான் பார்க்க வேண்டும்.

நடேசன் :

வட கிழக்கிலும் தமிழா கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் தத்தமக்கிடையேயான வேறுபாடுகளை, 'முரண்பாடுகளைக் களைந்து ஒன்று பட்டு செயற்பட்டு மாகாணசபை அடிப்படையில் நிர்வாகப் பரவலாக்கத்தில் தத்தமது உரிமைகளைப் பெற முயல வேண்டும்.

சந்திரசேகரன் :

தற்போதுள்ள மாகாணசபைகளில் இருக்கக் கூடிய மலையகப் பிரதிநிதிகள் எதுவித அரசியல் சக்தியுமற்ற பொம்மைகளாகவே இருந்து வருகிறார்கள். மலையகப் பிரதிநிதிகள் சிலர் மாகாண அமைச்சர்களாக இருந்தும் தங்களது சமுதாயத்திற்கு எதையும் செய்யமுடியாத நிலையிலுள்ளார்கள். இதனை அவர்களே பலமுறை வெளிப்படையாகக் கூறியுமிருக்கிறார்கள்.
இப்பதவிகள் தனிநபருக்கு பெருமையும் புகழையும் தருவதைத் தவிர சமூகத்திற்கு எந்தவித பயன்பாடையும் ஏற்படுத்தவில்லை. பத்துலட்சம் தமிழர்கள் மலையகத்தில் வாழ்கிறார்கள். ஆனால் ஒரு உள்ளூராட்சி சபைகளில் கூட இவர்கள் முழுமையான செல்வாக்குப் பெற்றவர்களாக இருக்கவில்லை. தனியான ஒரு மாகாணசபை கோருவதற்கு மக்கள் தொகை, பிரதேசம் போன்ற சகல தகுதிகளும் மலையக மக்களுக்கு உள்ளது. எனவே தனியான மாகாண சபையின் மூலம் தங்களது தனித்துவம் பாதுகாக்கப்படுவதோடு, பாதுகாப்புக்கும் உத்தரவாதம் ஏற்படும் என்ற நம்பிக்கை மலையக மக்கள் மத்தியில் வேரூன்றி வருகிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வாகத்தான் மாகாணசபைகள் அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன்மூலம் நாட்டு அபிவிருத்தியும், இனத்துவ ஐக்கியமும் வளர்ச்சியடையுமென அரசாங்கம் வலியுறுத்தி வருகிறது. இனக் குழுமங்களுக்கிடையே பரஸ்பரம் புரிந்துணர்வையும் சந்தேகமற்ற நிலையையும் நீக்க இவ்வமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென பலராலும் வலியுறுத்தப்படுகிறது. எனவே மலையக மக்களுக்கு

நன்றி - நூலகத்திட்டம்






இது யுத்த காலம். யுத்தங்களின் போது உயிர் இழப்புக்கள் பொருள் இழப்புக்களுடன் கூடவே மனிதர்கள் வன்முறைக்கும் உட்படுகிறார்கள். ஆண்கள் வன்முறைக்கு உட்படும் போது, வன்முறைக்கு ஆளாகிய ஆணைச் சமுதாயம் பரிதாபக் கண் கொண்டே பார்க்கிறது. மாறாக, பெண்கள் வன்முறைக்கு உட்படும் போது சமுதாயம் அவர்கள் மீது குற்றஞ் சுமத்துகிறது, கீழ்த்தரமாகப் பேசுகிறது. யார் மீது குற்றம் இழைக்கப்பட்டதோ, அவர்களே குற்றவாளிகளாகக் கருதப்படுவது பெண்களைப் பொறுத்தவரையில் சர்வசாதாரணமாக உள்ளது.

இன்று ஆயிரக் கணக்கில் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இலங்கையர்கள் நாடு திரும்புகிறார்கள். இப்படி நாடு திரும்பியவர்களில் ஒருவர் சில மாதங்களுக்கு முன்னர் பத்திரிகை ஒன்றில் பேட்டி கொடுத்திருந்தார். அதில் அவர் கூறிய ஒரு விடயம், தான் தங்கியிருந்த அகதி முகாமில் மட்டும் 36 இலங்கைப் பெண்கள் குழந்தைகளைப் பிரசவித்தார்கள் என்பதாகும். பத்திரிகைகளும் இதனை ஆரவாரத்துடன் வெளியிட்டன. இது எம்மவர் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. பலரது கருத்துப்படி இங்கிருந்து வெளிநாடு போய் விட்டு வரும் பெண்கள் (குறிப்பாக மத்திய கிழக்குக்குப் போய் திரும்புகிறவர்கள்) "நடத்தை கெட்டவர்கள் " என்பதாகும்.

இலங்கையில் இருந்து ஆயிரக் கணக்கில் வெளிநாடுகளுக்கு (தற்போது மத்திய கிழக்கிற்கு மட்டுமல்லாமல் சிங்கப்பூர், கொங் கொங், மலேசியா போன்ற நாடுகளுக்கும் கூட நமது பெண்கள் பணிப்பெண்களாகச் (house maids) செல்கிறார்கள்.

வறுமை தான் இவர்களை இவ்வாறு வெளிநாடுகளுக்குச் செல்லத் தூண்டுகிறது. தங்கள் கிராமங்களைக் கூட விட்டு வெளிக்கிடாத பெண்கள் மொழி தெரியாத அந்நிய தேசங்களுக்கு தமது அன்பிற்குரியவர்களை பிரிந்து செல்வதற்கு வேறு ஏதாவது காரணம் இருகக முடியுமா? உழைத்துப் பணம் சம்பாதித்தல் தான் அவர்களது பிரதானமான நோக்கமாக உள்ளது. பல குடும்பங்களில் கணவன்மாரே தமது மனைவியரை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கிறார்கள்.

இவ்வாறு வெளிநாடு செல்லும் பெண்களுக்கு உதவ அங்கு யாரும் கிடையாது. அவர்கள் அங்கு சென்றதும் அங்குள்ள தமது வீட்டு எசமானர்களின் தயவிலேயே தங்கியுள்ளார்கள். இவ்வாறு வெளிநாடு செல்லும் பெண்களில் அனேகமானோர் ஆயிரக்கணக்கில் கடன் எடுத்துத்தான் முகவர்கள் (Agents) மூலம் வெளிநாடு செல்கிறார்கள். எனவே கடனைத் திருப்பிக் கட்டும் வரைக்குமாவது அங்கு நிற்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இந்த நிலைமையில், வேலை மிகவும் கடினமாக இருந்தால் கூட அதைத் தாங்கிக் கொள்வதை விட அவர்களுக்கு வேறு தெரிவு கிடையாது. இப்படியான பரிதாபகரமான நிலையிலேயே பெரும்பான்மையான நமது பெண்கள் வாழ்கிறார்கள்.

இவ்வாறு வாழும் பெண்கள் தமது எசமானர்களால் பலவந்தப்படுத்தப்பட்டால் அது அவர்களுடைய குற்றமா? அதை அவர்கள் எப்படித் தவிர்க்க முடியும்? அப்படி அந்நிலையைத் தவிர்க்க வேண்டுமாயின் அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது, இப்படிப்பட்ட பாதுகாப்பு எதுவும் அற்ற வெளிநாட்டு வேலைகளுக்குச் செல்லாமல் விடுவதுதான். எனவே வெளிநாடுகளில் இருந்து திரும்பும் பெண்களைச் சந்தேகக் கண்ணுடனும் பழிச் சொற்களுடனும் எதிர் கொள்வதை விடுத்து இவ்வாறான பாதுகாப்பற்ற நிலைமைகளில் வெளிநாடுகளுக்கு நம் பெண்கள் போவதை நிறுத்துவதற்கு ஏற்றவாறு மாற்று வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

நாட்டில் நிலவும் இன்னொரு நிலைமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. யுத்தம் காரணமாக பலர் தமது வாழ்க்கைத் துணைகளை இழக்கிறார்கள். ஒரு ஆண் தனது மனைவியை இழந்து 6 மாதத்திற்குள் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்தால் கூட சமுதாயம் அவளைப் பார்த்து அவளுக்காக இரங்கும். ஆனால் கணவனை இழந்த ஒரு பெண் இன்னொரு ஆணுடன் கதைத்து விட்டால் போதும். உடனே அவளைப் பற்றி அவதூறாகப் பேசத் தொடங்கி விடுவார்கள். நமது சமுதாயம் மனித நடத்தையில் காட்டும் இரட்டை நிலைப்பாட்டை (double standard) இது எடுத்துக் காட்டுகிறது.

யுத்த இழப்புகளால் இலட்சக் கணக்கான மனிதர்கள் அதிக உடல், உளப் பாதிப்புகளுக்கு உட்பட்டிருக்கிறார்கள். இந்நிலையிலும் நமது சமுதாயம் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட பெண்களைத் தொடர்ந்து சித்திரவதை செய்வதை நிறுத்த வேண்டும். யுத்தத்தின் சுமையில் பெரும் பகுதியைத் தாங்கும் பெண்களுக்கு மேலும் கொடுமைகளை இழைக்காது அவர்களுக்கு அன்பும் ஆதரவும் வழங்க வேண்டும்.

நமது சமுதாயம் பாரிய இழப்புக்களை எதிர் கொண்ட வண்ணம் உள்ளது. மனித துயரத்தை எங்கும் காணக்கூடியதாக உள்ளது. இவ்வளவு இழப்புக்களில் இருந்தும் இனி யாவது நாம் மனிதர்களாக மீளுவோமாயின் எமது சமுதாயத்திற்கு விடிவு வரும்.

ஆராரோ ஆரிரரோ
யார் யாரோ வந்தார்கள்
யார் வந்து போனாலும்
நாம் மட்டும் தனித்து விட்டோம்

காதலித்த பூமியெல்லாம்
கண்ணிறைந்த கனவிலடா
கண் வளர்வாய் கண்மணியே
காலம் நம்மைச் சேருமென்று

பூப்பறித்து மாலை கட்ட
பூமியிலே நாதியில்லை
பூமியெல்லாம் காடுறையும்
புழுதி மண்டிப் போனதடா

மழை தூவும் வானமெல்லாம்
மண் விழுந்து போனதடா
விளையாத நிலங்களெல்லாம்
புழுதி வயல் ஆனதடா

கூவுகின்ற குயிலெல்லாம்
குரலிழந்து போனதடா
கூண்டுக்குள் சூரியனும்
துயிலாகிப் போனதடா

இருளான வானத்தில்
நிலவை எங்கே காட்டுவது?
இல்லாத கிண்ணத்தில்
சோறெங்கே ஊட்டுவது?

கழுகுகளும் ஓநாயும்
கங்கணமாய் சிரித்தபடி
கோடியினைச் சூழ்ந்திருக்கும்
கொடுமையினை பாடுவேனோ?

தானாக விடியாத
கீழ் வானம் நமது கண்ணே
தங்கமே இன்று மட்டும்
தாலாட்டில் நீயுறங்கு

போர்ப்பாட்டை முணுமுணுத்து
போனவன் தான் மாலையொன்றில்
போன தந்தை வரவுமில்லை
போன பக்கம் குரலுமில்லை !

முற்றத்து மல்லிகையின்
முழுதாக அவிழாத
மொட்டுக்கள் பறித்தெடுத்து
கூந்தலுக்குச் சூடிப் போனான்


மணம் கமழும் மல்லிகையை
மண் மீது எறிகுவேனோ?
மணம் முடித்த மன்னவனை
மனம் நிறையச் சுமப்பேனோ?

காணுகின்ற கனவுகளும்
காரிருளாய்த் தோன்றுதடா
காலை வரும் முன்னாலே
வெள்ளிகளும் தொலையுதடா!

நாளைய போர்க்கு
நெருப்பேந்தும் சூரியனே
நடுநிசியுமானதடா
இன்று மட்டும் நீயுறங்கு !

- பானுபாரதி.

## இரண்டு தாலாட்டுக்கள்



கண்ணுறங்கு கண்மணியே
கண்ணுறங்கு கண்மணியே......

கட்டி அணைத்துன்னைக்
கதை பேசி மகிழ்வதற்கு
காலம் இதுவல்ல !
கண்மணியே கண்ணுறங்கு

தாலாட்டுப் பாடியுன்னை
தூங்க வைக்க முடியாது
வாயடைத்துப் போச்செனக்கு
வார்த்தைகளும் வரவில்லை.

கால் சோர, கை நெகிழ
நெஞ்சதிரக் கழிகின்ற
காலமடி இங்கெமக்கு
கண்ணே நீ அறிவாயோ ?

கரு முகிலின் கைகளிலே
தவழ்கின்ற சின்னவள் நீ
போர்க்காலக் குழந்தையடி - என்
புத்துயிரே கண்ணுறங்கு

பூவாக உனை வளர்க்க
பூமியிலே முடியவில்லை
பூவெடுத்து பூசை செய்யும்
பூமியிது அல்லவடி

திசை ஒன்றும் தெரியாத
திக்கற்றோர் பூமி இது
திசை அறிந்து சொன்னவரைத்
தின்று நிற்கும் பூமியடி

நீறாகிப் போகிறது
நீ பிறந்த தேசம்
நீறாகு முன்பாக
நீ எழுந்து நடைபோடு
புயலாக மாறி
திசையோடு வழிகாட்டு.

— அனிக்கா —

நன்றி - நூலகத்திட்டம்



# உரிமைக் கோரிக்கை இனவாதமாகுமா?

ச.பாலகிருஷ்ணன்

மலையக மக்களுக்கு தனியான மாகாண சபை தேவையா ? என்ற கேள்விக்கு இலங்கையின் இன உறவுகள் (Ethnic Relations) பற்றிய யதார்த்த ரீதியான நிலைமைகளையும், மலையக மக்களின் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சாரப் பிரச்சினைகளையும், அப்பிரச்சினைகளின் சரித்திர ரீதியான பின்னணிகளையும், அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் ஆராய்வதன் மூலமே விடைகாண முயல வேண்டும்.

இலங்கையைப் போன்ற ஒரு பல்லின, பல மதங்களைக் கொண்ட நாட்டில் வாழும் வேறுபட்ட இனங்களுக்கிடையில் ஐக்கியமும், சகோதரத்துவமும் நிலவ வேண்டுமானால், அங்கு வாழ்கின்ற பல்வேறு இனங்களுக்குமிடையில் அரசியல், சமூக, பொருளாதார உரிமைகளில் சமத்துவம் பேணப்படுவதும், அரசு, குறிப்பிட்ட ஒரு இன, ஒரு மொழி, ஒரு மத சார்பற்றதாக ஜனநாயக மரபுகளை மதித்து நடந்து கொள்வதும் அரசியல் நடைமுறைகள் அங்கு வாழும் பல்வேறு இனங்களினதும் கலாசாரத் தனித்துவங்களைப் பாதுகாப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் ஏதுவான முறையில் அமைவதும் தவிர்க்க முடியாத தேவைகளாகும்.

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பிந்திய அரசியல் அபிவிருத்தியை உற்று நோக்கும் போது சிங்கள, பௌத்த மேலாண்மையை (Superiority) கருத்தியல் கோட்பாடாகக் கொண்ட (Ideology) பேரினவாத ஆதிக்கத்தை அரசியல் அதிகாரங்களின் துணையுடன் நிலைநாட்ட பல்வேறு வகையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளமையைக் காணலாம்.

சிறுபான்மை இனங்களின் சமத்துவ நிலைமைகளுக்கான போராட்டங்கள் யாவற்றையும் இனவாத அடிப்படையிலான இராணுவ நடவடிக்கைகளின் மூலம் ஒடுக்குவதற்காக பதவியிலிருந்த அரசுகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் தமிழ் மக்களின் தனி நாட்டுக் கோரிக்கைகளுக்கும், அரச பயங்கரவாதத்திற்கெதிரான ஆயுதப் போராட்டத்திற்கும் வழிவகுத்தது. எனினும், பதவியிலிருந்த அரசாங்கங்கள், தமிழ் மக்களின் சமத்துவ உரிமைகளை அங்கீகரித்து, நடைமுறையில் சமத்துவ நிலைமைகளை நிலைநாட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல், பேரினவாத ஆதிக்கத்தை பலாத்கார வழியில் நிலைநாட்டும் நோக்கில் இலங்கையின் இராணுவத்தை சிங்களமயப்படுத்தியதோடு பயங்கரவாத தடைச் சட்டம், அவசர கால விதிமுறைகள் போன்ற ஜனநாயக விரோத சட்டங்களை நடைமுறைப்படுத்தி இனப்படுகொலைகளின் மூலம் தீர்வு காண விழைந்ததனால் இன்று முழு நாடுமே இனவாதப் போர்க்களமாக மாற்றப்பட்டுள்ளதோடு ஆயுதக் குழுக்களின் ஆதிக்கத்துக்கும் வழி வகுத்துள்ளது.

இந்த நடைமுறையின் விளைவாக, சகல சிறுபான்மை இனங்களும் பல்வேறு விதமான அநீதிகளுக்கும், பாகுபாடுகளுக்கும் ஆளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசுகளின் பேரினவாத அரசியலுக்கு முதலாவதாகவும், முழுமையாகவும் பலியானவர்கள் மலையகத் தமிழர்களேயாவர். இலங்கையின் அரசியல்அதிகாரங்கள் பிரித்தானியரிடமிருந்து இலங்கையர்

மயப்படுத்தப்பட்டு ஒரு சில மாதங்களுள் மலையகத் தமிழ் மக்களின் பிரசாவுரிமையைப் பறித்தெடுப்பதற்காகவே பிரசாவுரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் இவர்களின் குடியுரிமையும், பின்பு வாக்குரிமையும் பறித்தெடுக்கப்பட்டதோடு பேரினவாத அரசியல் திறந்த வெளிக்கு கொண்டு வர ஆரம்பிக்கப்பட்டது.


பாராளுமன்ற பிரதிநிதித்துவ அரசியலில் ஒரு சமூகத்தின் வாக்குகள் என்பது அச்சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகப் பேரம் பேசக் கூடிய ஒரு ஆயுதமாகும். எனினும், பிரசாவுரிமையையும், வாக்குரிமையையும் இழந்து அரசியல் அநாதைகளாக்கப்பட்ட இவர்கள் பலரது தேவைகளுக்குமான விலை பொருள்களாக்கப்பட் டார்கள்.

தேவையேற்படும் போது ஒரு நொடிப் பொழுதில் சட்டங்களைக் கொண்டு வந்து நடைமுறைப்படுத்தும் அரசாங்கங்கள் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 1949, 1957, 1964 1974, 1986, 1988 என பல வருடங்களாக பல சட்டங்களையும், ஒப்பந்தங்களையும் நிறைவேற்றினாலும், இப்பிரச்சினையானது இன்றும் முழுமையாகத் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே தொடர்கிறது.

சமூகப் பொருளாதாரத் துறையில் மலையக மக்கள் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்கின்றார்கள். கல்வியறிவற்றோர் தொகை, மந்த போசணை உடையோர் தொகை போன்றவற்றில் மிகக் கூடுதலானவர்களாக காணப்படுபவர்கள் இவர்களே. கல்விவாய்ப்பு, அரசின் வேலை வாய்ப்புகள், குடியேற்றக் காணிகள் வழங்குதல், வீடுகள் வழங்குதல் போன்ற துறைகளை ஆராய்ந்தால் இவர்களுக்கு இழைக்கப்படுகின்ற பாகுபாடுகளை மிகவும் இலகுவாக விளங்கிக் கொள்ளலாம்.

மலையக மக்களில் பெரும் பகுதியினர் பெருந் தோட்டத் தொழிற் துறையைச் சார்ந்து வாழ்வதனால் அவர்களில் படித்த இள்ளைஞர்களில் பெரும் பகுதியினர் தோட்டங்களில் கிடைக்கக் கூடிய உத்தியோகங்களையே நம்பி வாழ்ந்து வந்ததுடன் அவர்களின் உடமைகளுக்கான பாதுகாப்பை தோட்ட நிர்வாகங்களிடமிருந்தே பெற்றுக் கொண்டனர். ஆனால் தோட்டங்கள் தேசிய மயமாக்கலின் பின் இவர்களின் தொழில் வாய்ப்புகள் குறைந்து வருவதோடு, இவர்களின் பாதுகாப்பிற்கும் பெரும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன.

1977, 1981, 1983 என தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்த தமிழர்களுக்கெதிரான தாக்குதல்களில் - பாதிப்புக்குள்ளானவர்களில் பெரும்பான்மையானவர்களும் இவர்களே. இத்தகைய திட்டமிட்ட தாக்குதல்களினால் சமூகப், பொருளாதாரத் துறையில் மேலும் பின்தள்ளப்பட்டதோடு நிரந்தரமாக பயத்துடனும், பீதியுடனும் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.




"தமிழீழ எதிர்ப்பு" என்னும் போர்வையில் பேரினவாதிகளால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் இத்தாக்குதல்களில் தமிழீழக் கோரிக்கையுடன் எதுவிதத் தொடர்புகளுமற்ற மலையக மக்கள் பெரும்பான்மையில் பாதிக்கப்பட்ட சம்பவமானது இந் நாட்டின் பேரினவாதம் எவ்வளவு கொடூரமானது என்பதை உணர்த்துவதற்குப் போதுமான காரணியாகும்.

மலையத்தின் மத்திய பிரதேசங்களில் இவர்கள் செறிவாக வாழ்கின்ற பகுதிகளில் மட்டுமே இத்தகைய தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

எனினும், இப்பகுதிகளில் மாற்றுக் குடியேற்றங்களை ஏற்படுத்தி இப்பிரதேசங்களில் மலையக மக்களின் இன விகிதாசாரத்தை மாற்ற பதவியிலிருக்கும் அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகள் இன உறவுகளில் புதிய முரண்பாடுகளை இப்பிரதேசங்களில் தோற்றுவிக்கக் கூடிய அபாயத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த பல வருடங்களாக, இலங்கையின் அரசானது சிறுபான்மை இனங்களுக்கெதிராக இழைக்கப்படுகின்ற அநீதிகளையும், பாகுபாடுகளையும் நியாயப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதோடு, இலங்கையின் சகல சிங்கள மக்களையும் பேரினவாத மயப்படுத்துவதில் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளது. இந்தக் குறிக்கோளை அடைவதற்கு சகல வெகுசனத் தொடர்பு சாதனங்களையும் பயன்படுத்தி மக்களின் உணர்வுகளைத் தமிழர்களுக்கு எதிராகத் திசை திருப்ப முயன்று வருகின்றது.

இம் முயற்சிகள் இன உறவுகளை மேலும் பாதிப்பதோடு இனங்களின் சமத்துவத்தை நோக்கிய நடவடிக்கைகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவே அமையும்.

இத்தகைய பின்னணியில் தான் மலையக மக்களின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். சமூகப் பொருளாதாரத் துறையில் மிகவும் பின்தள்ளப் பட்டுள்ள மலையக மக்கள் இந்நாட்டின் தேசிய நீரோட்டத்தில் (Main Stream of Life) சரியான இடத்தைப் பெறுவதற்கு அவர்களின் சமூக, பொருளாதார கலாசார சமத்துவத்தை நோக்கி அபிவிருத்தியடைவது மிகவும் முக்கிய தேவையாகும்.

இனவாத ரீதியான பாகுபாடுகளைக் கொண்ட அரசியல் சூழ்நிலையில் இவ்வகையான அபிவிருத்தியை நோக்கி செயற்படுவதற்கு ஆரம்ப நடவடிக்கையாக ஆளும் இனமாக இருக்கும் பெரும்பான்மையினரிடமிருந்து ஆட்சியதிகாரத்தில் தமக்குரிய பங்கைப் பெற்றுக் கொள்வது தவிர்க்க முடியாததொன்றாகும். ஆட்சியதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரப் பங்கீட்டுப் பிரதேசம் (Unit of Devolution) தேவைப்படுகின்றது.

மலையக மக்கள் இலங்கையின் பல பாகங்களிலும் வாழ்ந்தாலும் மத்திய, ஊவா, சப்பிரகமுவ ஆகிய மாகாண எல்லைக்குட்பட்ட சில பகுதிகளில் செறிவாக வாழ்கின்றனர். எனவே மலையக மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு பிரதசம் உருவாக்கப்படுவதன் மூலம் இந்த அதிகாரப் பங்கீட்டுப் பிரதேசம் உருவாக்கப்படலாம்.

இலங்கையின் அரசியல் முரண்பாட்டில் அதிகாரப் பங்கீடு என்பது பெரும்பான்மையினர் சிறுபான்மை இனங்களுடன் நீதியான முறையில் ஆட்சியதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதாகவே அமைய வேண்டும். இதை விடுத்து, எவ்வித அடிப்படையுமற்ற விதத்தில், தற்போது நடைமுறையில் இருக்கும் மாகாண எல்லைகளை அதிகாரப் பங்கீட்டுப் பிரதேசமாகக் கொள்வதில் எவ்வித முரண்பாடுகளும் தீரப் போவதில்லை.

இவ்வித அதிகாரப் பங்கீட்டு முறையை பிரிவினைவாதமென புறக்கணிப்பவர்கள் யதார்த்த ரீதியான நிலைமைகளை உணராதவர்கள். மலையக மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அதிகாரப் பங்கீட்டுப் பிரதேசத்தின் தேவையை அம்மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தியையும், அவர்களின் உயிர், உடைமை, மொழி, பாதுகாப்பையும், சமத்துவ சமூகமாக தம்மை அபிவிருத்தி செய்து கொள்வதையும் உறுதி செய்யக் கூடிய நடைமுறையாகவே இனங்காணுதல் வேண்டும்.

இதன் மூலம் இனங்களின் புரிந்துணர்வுகள் வலுவடைவதோடு இனவாத உணர்வுகளின் வளர்ச்சியை எதிர்த்து செயற்படவும், தேசிய ஒருமைப்பாட்டை நோக்கிச் செயற்படவும் ஏதுவாக இருக்கும்.

இன்றைய இனவாத சமூக, அரசியல் சூழலில் மலையக மக்களின் சமூக, பொருளாதார, கலாசார உரிமைகளின் சமத்துவத்தை நிலைநாட்ட இதைவிட சிறந்த வழிமுறைகள் எதுவுமிருக்க முடியாது.

## ஊருக்கு...

பல்கலைக்கழகம்-முஸ்லிம் பல்கலைக் கழகம் வேண்டாமா என்ற கேள்வி எழுந்துள்ளது. சிலர் அத்தகைய ஒன்றை அமைப்பதற்கு முயல்வதாகவும் தெரிகின்றது. இது அவசியம்தான். அப்படி அமைந்தால்தானே ஆரம்ப இடை நிலைக் கல்வி நிறுவனங்களுக்கும் உயர்கல்வி நிறுவனங்களுக்கும் இடையே ஒரு தொடர்ச்சியும் தொடர்பும் இருக்கும். உயர்கல்வியில் மட்டும் இன உறவு எதற்கு? முஸ்லிம் பல்கலைக் கழகம் ஒன்றும் உருவாகட்டும். இன உறவின் சவப்பெட்டி மீது இறுதி ஆணியும் அடிக்கப்படட்டும் !


வாழ்க ஈழமணித் திருநாடு
நமோ நமோ மாதா
நம் சிறி லங்கா

நன்றி - நூலகத்திட்டம்



# சரிநிகர்

# ஏன் இந்தப் பரீட்சை?



துகழர்த்தி எங்கே?

திட்டமிட்டபடி க.பொ.த. சாதாரண பரீட்சை 2.12.90 அன்று தொடங்கி நடைபெற்று முடிந்து விட்டது. நாட்டின் ஒரு பகுதி இருள்மயமாக இருக்கும் போது மறுபகுதி ஒளியில் திளைக்கின்றது. ஒற்றை ஆட்சியில் ஒரு குடையின் கீழ் ஆட்சி நடாத்துவதாகக் கூறும் அரசு அதே குடையின் கீழ் உள்ள மற்றொரு பகுதி மக்களை மழையில் நனைந்து குளிரில் வாடுவதற்கு "வரம்" கொடுத்து உள்ளது.

நாட்டின் வடக்கு கிழக்கு பகுதிகளில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பரீட்சையை ஒத்தி வைத்து விட்டு ஏனைய மாவட்டங்களான வவுனியா, மன்னார், மட்டக்களப்பபு, அம்பாறை, திருமலை மாவட்டங்களில் பரீட்சையை நடாத்தியது.

வவுனியாவில் திட்டமிட்டபடி பரீட்சை நடக்கும் என அரச அதிபரால் வெளியிடப்பட்ட அறிக்கை 1.12.90 வீரகேசரியில் வெளிவந்தது. அதே பத்திரிகையில் வவுனியாவுக்கு வடக்கே உள்ள சில பகுதிகள் படையினரின் கட்டுப்பாட்டினுள் வந்து உள்ளது எனவும், தொடர் யுத்தம் நடைபெறுகின்றது. எனவும் செய்தி வெளிவந்து உள்ளது. இவ்வேளை நகருக்கு வெளியே வடபுறம் ஊரடங்கு அமுலில் இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆயினும் நகருக்கு அப்பால் உள்ள மாணவர்கள் பரீட்சைக்கு வருவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு உள்ளது என்றும் பரீட்சை முடியும் வரை மாணவர்கள் அங்கேயே தங்க வைக்கப்படுவார்கள் என்றும் கூறப்பட்டது.

இதற்கு ஒரு சில தினங்களுக்கு முன் வந்த பத்திரிகைக் குறிப்பு ஒன்று வவுனியாவில் லொறி உதவியாளர் ஒருவர் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்றம் சாரதியைக் காணவில்லை எனவும் கூறியது. இவையாவற்றையும் தெரிந்து கொண்டு நகருக்கு வெளியில் உள்ள மாணவர்கள் எத்தனைபேர் பரீட்சை எழுத வந்து இருப்பார்கள் ?

மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை மாவட்டங்களில் கூட அரசு தனது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்த பகுதிகளிலேயே பரீட்சையை நடாத்தியது. கட்டுப்பாட்டினுள் இல்லாத பகுதிகளில் இருந்து முழுமையாக மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்காக எப்படி நகரப் பகுதிகளுக்கு வருவார்கள்? ஆயின், இம்மாவட்டங்களில் நடை பெற்ற பரீட்சை கண்கட்டு வித்தைதானா?

இம்மாவட்டங்களில் யுத்தத்தின் தழும்புகள் ஆறுவதற்கு முன், இன்னும் பல பகுதிகளில் இடையிட்டு யுத்தம் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் பொழுதே ஒரு சில வாரங்களுக்கு முன் அவசர அவசரமாக பாடசாலைகளைத் தொடங்கி பாடத்திட்டங்கள் பூர்த்தியாக்கப்படாது அரைகுறையாக இருக்கும் போதே பரீட்சையை வெற்றிகரமாக நடாத்தியதன் நோக்கம்தான் என்ன?

இவையாவற்றினதும் பின்னணியில் மறைந்திருக்கும் அடிப்படை அம்சங்களையும் அவற்றினூடு அரசாங்கம் சாதிக்க முயலும் "சாதனை"களையும் நாம் புரிந்து கொள்வது அவசியம் ஆகும். இதன் வாயிலாகவே அரசின் குறுகியகால, நீண்ட கால இலாப நோக்கில் அமைந்த செயற்பாட்டினை இனம் கண்டு கொள்ளலாம்.

மேற்குறித்த நான்கு மாவட்டங்களிலும் பரீட்சை நடாத்தியதன் மூலம் அப்பகுதிகள் தனது கட்டுப்பாட்டினுள் உள்ளன என்பதனையும், நாளாந்த நிர்வாக இயக்கம் கிரமமாக நடைபெறுகிறது என்பதனையும் நிலைநிறுத்த முனைந்து உள்ளது அரசு. இதனை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனது பிரச்சாரத்திற்கு பயன்படுத்திக் கொண்டது. இது குறுகிய காலத்தில் அரசாங்கத்திற்கு இலாபத்தினைக் கொடுத்தது. கொடுத்து வருகின்றது.

நீண்ட கால நோக்கில் வடக்கு, கிழக்கு மாணவர்களிடையே நிலவி வரும் உள்ளும் புறமுமான தொடர்ச்சியான சமநிலையை சிதைப்பதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாகவும் இதனை மேற்கொள்கின்றது.

வட பகுதி மாணவர்கள் பரீட்சை எடுக்காமல் இருக்கும் போது கிழக்கு பகுதியினர்தமக்கு ஒத்துழைப்பு தருவதாகவும் வடபகுதியே பிரச்சினைக்கு உரிய பகுதி எனக் காட்டுவதன் மூலம், கிழக்கினை தனிமைப்படுத்தி, வடக்கு கிழக்கில் இருந்து எப்போதும் பிரிந்தே வருகின்றது என்று கோஷத்தை நிலைநிறுத்த முனைகின்றது.

மேலும் வடக்கு கிழக்கில் பரீட்சை எடுக்க முடியாமல் உள்ள மாணவர்கள் தென்பகுதியில் பரீட்சை எழுதலாம் எனக் கூறி அதற்கான ஒழுங்குகளையும் செய்து கொடுத்தது. ஏற்கெனவே பிரதேச ரீதியாக வடகிழக்கு பகுதிகளுக்கிடையே கல்வி இடைவெளியை ஏற்படுத்த முனையும் அரசு வடபகுதி மாணவர்களையும் பிரித்தாள முனைந்து உள்ளது. இதனால் வசதி படைத்த மாணவர்கள் சிலர் தென்பகுதியில் பரீட்சை எழுத ஏனையவர்கள் அச் சந்தர்ப்பத்தை இழந்துள்ளனர். இச் செயற்பாட்டின் ஊடாக வடபகுதி மாணவர்களிடையே ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கி உள் முரண்பாட்டை அதிகரிக்கச் செய்து உள்ளது.

அரைகுறையான பாடத்திட்டப் பூர்தியாக்கலாலும் இம்மாவட்டங்களின் யுத்தத்தின் வாழ்நிலையாலும் பரீட்சை எழுதும் மாணவர்களில் எத்தனை சதவீதத்தினர் பரீட்சையில் சித்தி அடையும் நிலையில் உள்ளனர். இவை யாவும் அரசிற்கு சாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதில் ஐயம் இல்லை.,

இத்தகைய நீண்ட கால நோக்கின் செயற்பாட்டு வடிவத்திற்கு தரப்படுத்தலே அத்திவாரமாக அமைந்தது. அந்த தொடர் நிலைகளே காலத்திற்குக் காலம் ஏற்படும் யுத்த நிகழ்வுகளைக் காரணம் காட்டி நடைபெறும் கல்விசார் ஒடுக்கு முறையாகும்.

கடந்த ஆவணி மாதத்தில் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சை முற்று முழுதாகவே வடகிழக்குப் பகுதிகளில் நடைபெறவில்லை. ஆனால் தென் பகுதியில் நடைபெற்று அதன் பெறுபேறுகளும் வெளிவருவதற்கான நாட்கள் நெருங்கி விட்டன. எனவே இவ்வருடத்திற்கான பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் பகுதிகளின் நிலை என்ன?

இதனிடையே மட்டு. யாழ் பல்கலைக் கழக மாணவர்களின் நிலை கேள்விக் குறியாக உள்ளது. அதாவது இப்பல்கலைக் கழகங்களுக்கு திரும்ப முடியாமல் உள்ள முஸ்லீம் மாணவர்களும் அகதிகளாக இடம் பெயர்ந்த அல்லது வேறு காரணத்தால் திரும்ப முடியாமல் உள்ள மாணவர்களுமே இதனுள் அடங்குவர்.

இவர்களுக்கு அரசாங்கம் இன்னும் சரியான தீர்வை முன் வைக்கவில்லை. பொல்கொல்லவில் ஓர் "மடாலயத்தை" திறந்து அங்கு சென்று படிக்குமாறு இவர்கள் பணிக்கப்பட்டு உள்ளனர். ஆனால் இவர்களுக்கான அடிப்படை வசதிகள் (தங்குமிடம், உணவு போன்றன) செய்து கொடுக்கப்படவில்லை தாமே இவற்றைத் தேடிக் கொள்ளுதல் வேண்டும். விரிவுரையாளர்கள் முழுமையாக நியமிக்கப்படவில்லை; விரிவுரைகள் பல ஒழுங்காக நடைபெறுவதும் இல்லை. பரீட்சைகள் நடாத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இது சம்பந்தமாக சில மாணவர்கள் அமைச்சின் செயலாளர் ஒருவருடன் தனிப்பட்ட சந்திப்பில் வினாவிய போது அவர் சொன்னார் "நீங்கள் வீதிகளில் சும்மா சுத்துகிறீர்கள் என்பதற்காகத்தான் இவ்வொழுங்கு உடன் செய்யப்பட்டது. ஆனால் அதற்கான முழுமையான நடவடிக்கைகள் எதுவுமே இன்னும் முடிவாகவில்லை."

எல்லாவற்றிக்கும் மேலாக இவ்வருடத்தின் சிறந்த ஒரு ... இது. யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் 2ம், 3ம் வருட மாணவர்களுக்கான மீள் பரீட்சையை கொழும்பிலும் நடாத்த அரசு தீர்மானித்து உள்ளதாம். எனவே யாழ் செல்ல முடியாதவர்கள் கொழும்பில் பரீட்சை எடுக்கலாம் என அறிவித்து உள்ளது.

புலிகளின் வெளியேற்ற உத்தரவினால் ஒரு சில பொருட்களுடன் அகதிகளாய் புறப்பட்ட முஸ்லிம் மாணவர்களும் யுத்தபீதியினால் புறப்பட்ட தமிழ் மாணவர்களும் ஒழுங்கான தங்ககங்கள் இன்றி கொழும்பு நகரின் விடுதிகளில் நிலத்தில் பாய் போட்டு தூங்குகிறார்கள். சொந்த வாழ்விடங்களை விட்டு புலம் பெயர்ந்த இம் மாணவர்களுக்கு படிக்கும் சூழ் நிலையே அற்றுப் போய் உடல்,

உளரீதியாக பாதிக்கப்பட்டு இருக்கும் போது தெருக்களில் இருந்தா படித்து பரீட்சை எழுதுவது ?

இடம் பெயர்ந்த மாணவர்கள் தென்பகுதியில் கல்வி பயில வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப் படும் என்று வானளாவ அரசாங்கம் கத்தியது. ஆனால் கொழும்பு நகரில் பாடசாலைஅனுமதி கேட்டுப் போகும் மாணவர்களிடம் பொலிஸ் அறிக்கை, மின்கட்டணச் சீட்டு, தண்ணீர் கட்டணச் சீட்டு போன்றவைகள் கேட்கப்பட்டு பலருக்கு அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது.

இவையாவும் தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார சமூக விழுமியங்களை தொடர்ச்சியாக திட்டமிட்டு சிதைத்து வரும் அரசின் ஒரு பகுதி நடவடிக்கையே கல்விசார் ஒடுக்கு முறை என்பதை புலப்படுத்துகின்றன.

– என். சிவமூர்த்தி.

## பேச்சுவார்த்தையா...

அதை திணிப்பதாக இருக்குமே தவிர சிக்கலை அவிழ்ப்பதாக இருக்க முடியாது. பேச்சுவார்த்தை பகிரங்கமாக நடாத்தப்பட வேண்டும். மக்கள் முன் எல்லாக் கருத்துக்களும் வைக்கப்பட வேண்டும். அப்போதுதான் நியாயத்திற்கு மாறான சக்திகள் மக்கள் முன் அம்பலப்பட்டுப் போக நியாயத்தின் பக்கமுள்ள சக்திகள் முன்னுக்கு வரும் வாய்ப்பு உண்டு. தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க அரசு யாருடனும் பேச வேண்டிய அவசியமில்லை. சுய நிர்ணய உரிமையை எப்படிப் பயன்படுத்துவது என்பது தொடர்பாகவே பேச வேண்டி இருக்கும். இது தொடர்பான பேச்சு தான் பிரச்சினையை யதார்த்த பூர்வமாக தீர்ப்பதற்கான ஒரு பேச்சாக இருக்கும்'

## அடுத்த இதழ்:

- வடக்கு, கிழக்கு, மலையகத்தில் திட்டமிட்ட குடியேற்றங்கள் – சிறப்புக் கட்டுரை.
- பன்னிரண்டு பக்கங்கள் –
- மனித உரிமைதினக் கலைவிழா பற்றி –

மற்றும் வழமையான அம்சங்கள்!

சரிநிகர் மாத இதழ், இல, 6, அலோ சாலை, கொழும்பு-3, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்,(MIRJE) சார்பில் ச. பாலகிருஷ்ணனால், கொழும்பு-10, ஜும்மா மஸ்ஜிட் லேன்,